# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=  இதழ் - 08  05.03.2023




# உணவே மருந்து



OKAYA
மின்சார
ஈருருளிகள்

02



எனது
கனவுப்
பண்ணை

15

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



# விரும்பிய இடத்துக்கு நினைத்த நேரத்தில் செல்ல

# OKAYA மின்சார ஈருருளிகள்

## இப்போது யாழ்ப்பாணத்திலும்!

பெற்றோல் தட்டுப்பாடு, கியூஆர் கோட் பிரச்சினை என எந்த யோசனையும் இல்லாமல் வேண்டிய இடத்துக்கு வேண்டிய நேரத்தில் சென்றுவருவதற்கு வந்துவிட்டது **OKAYA** மின்சார ஈருருளிகள். இப்போது யாழ்ப்பாணத்துக்கும் அறிமுகமாகும் **OKAYA** மின்சார ஈருருளிகள் எரிபொருளுக்காக நீங்கள் செலவிடும் பணத்தை முற்றாகச் சேமிக்க உதவப் போகின்றது.

டக்ளஸ் அன்ட் சன்ஸ் **Douglas and Sons (DSL)** நிறுவனத்தின் ஊடாக கடந்த டிசெம்பர் மாதம் கொழும்பில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த **OKAYA** மின்சார ஈருருளிகள் இப்போது யாழ்ப் பாணத்துக்கும் வந்துவிட்டது. யாழ்ப் பாணத்தில் வெள்ளிக்கிழமை ஆரம் பமாகி ஞாயிற்றுக்கிழமை வரை நடை பெறும் யாழ். சர்வதேச வர்த்தகக் கண் காட்சி மூலமாக யாழ்ப்பாண மக்க ளுக்கு இது அறிமுகப்படுத்தப்படுகின் றது.

**OKAYA** மின்சார ஈருருளிகளின் அனுபவத்தை சர்வதேச வர்த்தக கண் காட்சியில் யாழ்ப்பாண மக்கள் பெற்றுக் கொள்ள முடியும். அதன் சிறப்பியல்புக ளையும் அறிந்துகொள்ள முடி யும்!

சர்வதேச தரம் வாய்ந்த **OKAYA** தயாரிப்புக்களில் மின்சார ஈருருளிகள் பிரதான மானது. இந்தியாவில் ஏற்க னவே அறிமுகமாகி பெரும ளவு வரவேற்பை இது பெற் றிருக்கின்றது. இந்தியாவில் உள்ள **OKAYA** நிறுவனம் சுமார் நான்கு தசாப்த கால அனுபவத்தில் இதனை தயாரித்துள்ளது.

இன்றைய காலகட்டத்தில் **OKAYA** மின்சார ஈருருளிகள் முக்கியத் துவம் பெறுவதற்கு பல காரணங்கள் உள்ளன. வழமையான ஈருருளிகளுடன் ஒப்பிடும்போது **OKAYA** மின்சார ஈருருளி கள் பல சிறப்பியல்புகளைக் கொண்டுள் ளன.

முதலாவது, ஒரு சதம் கூட செலவில் லாமல் சூரிய சக்தியிலேயே இதன் பற் றறியைச் சார்ஜ் பண்ண முடியும். பெற் றோல் தட்டுப்பாடு, வரிசையில் காத்திருத் தல், கியூஆர் கோட் என எந்தப் பிரச்சினை யும் இல்லை.

இரண்டாவதாக, அழகிய உங்களுக் குப் பிடித்த வர்ணங்களில், கண்ணைக் கவரும் வடிவமைப்பில் இந்த **OKAYA** மின்சார ஈருருளிகள் விற்பனைக்குத் தயாராகவுள்ளன. இரண்டு வருட உத்த ரவாதத்துடன் இதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

> ஒரு சதம் கூட செலவில்லாமல் சூரிய சக்தியிலேயே இதன் பற்றறியை சார்ஜ் பண்ண முடியும். பெற்றோல் தட்டுப்பாடு, வரிசையில் காத்திருத்தல், கியூஆர் கோட் என எந்தப் பிரச்சினையும் இல்லை

மூன்றாவதாக, **OKAYA** மின்சார ஈருருளிகள் மணித்தியாலத்துக்கு 60-70 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடி யவை.

அதேவேளை, ஒரு தடவை சார்ஜ் செய்தால் 70 முதல் 80 கிலோ மீற் றர் வரையில் பயணம் செய்ய முடியும். இரட்டை பற்றறியை வைத்திருந் தால் 150 முதல் 160 கிலோ மீற்றர் வரையில் பயணம் செய்யக்கூடியதாக இருக்கும்.

இலங்கையின் காலநிலைக்கு இசை வானதாகத் தயாரிக்கப்பட்டுள்ள **OKAYA** மின்சார ஈருருளிகளின் உதிரிப்பாகங் கள் கிடைக்குமா? என்று யோசிக்கத் தேவையில்லை. அவை அனைத்தும் டக்ளஸ் அன்ட் சன்ஸ் நிறுவனத்தின் மூலமாக இலங்கையில் பெற்றுக்கொள்ள முடியும்.

சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும், உங் கள் பணப் பையில் கைவைக்காமலேயே பயணங்களைச் செய்யக்கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த **OKAYA** மின்சார ஈருருளிகளை வாங்குவதற்கும் அது குறித்த அனுபவத்தை பெற்றுக்கொள் ளவும் யாழ் முத்தவெளியில் நடைபெறும் யாழ். வர்த்தக கண்காட்சியில் **Block – O** விற்கு வருகை தாருங்கள்.




> "இலங்கைக்கு இப்போது அதிகளவு கடன்களை வழங்க அமெரிக்கா முன்வந்திருக்கின்றது. இந்த நிலையில் சீனா தமது நிலைப்பாட்டில் இறுக்கமாக இருப்பது இலங்கையை மையப்படுத்திய அமெரிக்க – சீனா பனிப்போரின் பிரதிபலிப்பாகவே காணப்படுகின்றது. இந்தப் போரின் விளைவுகளை இலங்கை எதிர்நோக்க வேண்டியிருக்கும்"

# ஐ.எம்.எப்.பின் நிபந்தனைகள் கொந்தளிப்பை ஏற்படுத்தும்!

ஐ.எம்.எப். முன்வைத்துள்ள நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தும் போது, இலங் கையில் ஸ்திரமற்ற, கொந்தளிப்பான ஒரு சூழ்நிலை ஏற்படலாம் என்று எச்சரித்துள்ள பேராதனை பல்கலைக்கழக பொருளியல்துறை பேராசிரியர் எஸ்.விஜயசந்திரன் உலகின் பல நாடுகளில் இவ்வாறு இடம்பெற்றிருக்கின்றது என்றும் சுட்டிக் காட்டுகின்றார்.

தமிழர் பொருண்மியம் வார இதழுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலில் இதனை அவர் தெரிவித்தார். அவரது நேர்காணலின் விபரம் வருமாறு -

**கேள்வி** - நாட்டின் பொருளாதார நிலைமை இப்போது ஓரளவுக்கு சுமூகமாக வந்துவிட்டதா? அல்லது எதிர்காலத்தில் இது மீண்டும் மோசமான ஒரு நிலைக்கு செல்லுமா?

**பதில்** - இலங்கையின் பொருளாதார நிலைமை ஓரளவுக்கு சுமூகமாகிவிட்டதாகத் தென்பட்டாலும் கூட அது, நிலைத்திருக்கக்கூடிய ஒன்றாக இல்லை. இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைக்கு அடிப்படையாக இருப்பது இலங்கையின் வெளிநாட்டு கடன்சார்ந்த பிரச்சினை. இரண்டாவது இலங்கையின் ரூபாவுக்குத் தொடர்ச்சியாக ஏற்பட்ட வீழ்ச்சியும், அதனுடன் ஏற்பட்ட அமெரிக்க டொலருக்கான தட்டுப்பாடும்.

நேர்கண்டவர்
பி.பார்த்தீபன்

அதேபோல ஏற்றுமதி வருமானத்தில் ஏற்பட்டிருந்த வீழ்ச்சி. இறக்குமதிகள் அதிகரித்திருந்தமை. இதனுடன் இணைந்ததாக வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு. இவற்றால் மக்களின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்பட்டது.



பேராசிரியர்
விஜயச்சந்திரன்

இதனைவிட எரிபொருள் விலையேற்றம், மின்சாரக் கட்டண அதிகரிப்பு போன்றவற்றினால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை வெளிநாடுகளுக்கு மாற்றுகின்ற தன்மை. இலங்கையின் உள்நாட்டு உற்பத்தியில் காணப்படும் தேக்க நிலை. இது போன்ற பல பிரச்சினைகள் இங்கு காணப்பட்டாலும் இவற்றுக்கான ஒரு தீர்வு காணப்படவில்லை.

அண்மைக்காலத்தில் உணவுப் பொருட்கள் போன்றவற்றுக்கான விலைகள் சற்று குறைந்திருப்பது போல காணப்பட்டாலும், மின்சாரக்கட்டணத்தில் ஏற்பட்டுள்ள பாரிய அதிகரிப்பால் உற்பத்திப் பொருட்களுக்கான விலைகள் பலமடங்கு அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது. எரிபொருட்கள் உட்பட பல பொருட்களின் விலைகள் அதிகரிக்கலாம்.

மூன்றாவதாக அரசாங்கம் தற்போது விதித்திருக்கின்ற வரிகள். அதாவது, மாதந்த வருமானம் பெறுபவர்கள் உட்பட அனைவருக்கும் விதிக்கப்பட்டிருக்கின்ற வரி. இதனால், மக்கள் தங்களுடைய வருமானத்தில் செலவிடக்கூடிய தொகை 36 வீதம் வரையில் குறைவடைகின்றது.

இதனால் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினை ஓர் அரசியல் பிரச்சினையாகி, இப்போது ஒரு சமூகப் பிரச்சினையாக மாற்றமடைந்திருக்கின்றது. பசி, போசாக்கின்மை, பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகுவது, தற்கொலை விகிதம் அதிகரிப்பு, மக்களின் சராசரி ஆயுட்காலம் குறைவடைதல், மருத்துவ சுகாதார சேவைகளில் பின்னடைவு, மருத்துவமனைகளில் மருந்துகள் தட்டுப்பாடாகக் காணப்படுவது போன்றன மக்களை வாட்டும் பிரச்சினைகளாக உள்ளன. இவற்றைவிட கொலைகள், களவு, விபச்சாரம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது என சமூகம் சார்ந்த பல பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன.

ஆக, இந்தப் பொருளாதாரப் பிரச்சினை இப்போது ஒரு சமூகப் பிரச்சினையாக மாற்றமடைந்துகொண்டிருக்கின்றது. இது விரும்பத்தக்க ஒன்றல்ல. இலங்கையில் மோசமான சமூகப் பிரச்சினைகளை இது எதிர்காலத்தில் உருவாக்கும் ஆபத்தும் உள்ளது.

**கேள்வி** - சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்குமாக இருந்தால் இந்த நெருக்கடி தீர்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றதா?

**பதில்** - நாணய நிதியத்தின் உதவி இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வைக்கொண்டுவரும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால், இலங்கையின் நெருக்கடியை உடனடியாகத் தீர்ப்பதற்கு பத்து மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகின்றது. ஆனால், நாணய நிதியம் 2.9 மில்லியனுக்குத்தான் ஒப்புதல் வழங்கியிருக்கின்றது. இதனைக் கூட 48 மாதங்களில் - அதாவது நான்கு வருடங்களில் வழங்குவதற்குத்தான் நாணய நிதியம் திட்டமிட்டுள்ளது.

(06ஆம் பக்கம் பார்க்க)

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777 276 949

# மீனவர் பிரச்சினை

வடபகுதிக் கடலில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டுவருவதாக வெளியாகியிருக்கும் செய்திகள் வடக்கில் ஒரு கொதி நிலையை ஏற்படுத்தியிருக்கின்றன. இதற்கு ஒரு போதும் அனுமதிக்க முடியாது என வடபகுதி மீனவர்கள் திட்டவட்ட மாக அறிவித்திருக்கின்றார்கள். அரசாங்கத்தின் இந்தத் திட்டம் செயலுருப்பெறுமானால், பெரும் போராட்டம் வெடிக்கும் என்ற எச்சரிக்கையையும் அவர்கள் விடுத்திருக்கின்றார்கள்.

மீனவர்களின் இந்த எச்சரிக்கையை வெறுமனே ஒரு செய்தியாகக் கடந்துசென்றுவிட முடியாது. இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் ஏற்கனவே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மீனவ சமூகத்தினர், இந்த அத்துமீறல்களுக்கு அரசாங்கம் அங்கீகாரத்தை வழங்குவதாக இந்த "லைசன்ஸ் திட்டம்" அமைந்திருக்கும் என எச்சரிக்கையடைந்திருக்கின்றார்கள். தமிழ் அரசியல் தலைமைகளும் இந்தத் திட்டத்துக்கு எதிராகக் குரல் கொடுத்திருக்கின்றன.

முப்பது வருடகாலமாகத் தொடர்ந்த போரினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் மீனவர்கள்தான். அந்தப் பாதிப்பிலிருந்து அவர்கள் மீண்டு வருவதற்கான ஆக்கபூர்வமான செயற்றிட்டங்கள் எதனையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என்பது அனைவருக்கும் தெரியும். மீனவர்கள் தங்களுடைய சொந்த முயற்சியால்தான் ஓரளவுக்கு தமது வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தக்கூடியளவுக்கு முன்னேறியிருக்கின்றார்கள்.

போர் முடிந்திருந்தாலும், புதியதொரு சூழ்நிலையில் வித்தியாசமான ஒரு மறைமுக யுத்தத்தை எதிர்கொள்ள வேண்டியவர்களகவே அவர்கள் உள்ளார்கள். ஒருபுறம் சிங்கள மீனவர்களின் ஆக்கிரமிப்பு. இது அரசாங்கத்தின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் கடற்படையினரின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படுகின்றது. மறுபுறம் இந்திய மீனவர்களுடைய அத்துமீறல்கள். அவர்கள் வடபகுதியின் கரை வரையில் கூட வந்துசெல்கின்றார்கள்.

சிங்கள மீனவர்களும், இந்திய மீனவர்களும் வைத்திருக்கும் அதி நவீன உபகரணங்களுக்கு நிகரான உபகரணங்கள், படகுகள் என எதுவுமே வடபகுதி மீனவர்களிடம் இல்லை. இதனால் கடற்பகுதியில் தற்காப்பு யுத்தம் ஒன்றை நடத்திக் கொண்டுதான் தமது தொழிலையும் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் வடபகுதி மீனவர்களுக்கு இருக்கின்றது. இதற்கு மேலாக எரிபொருள் பிரச்சினை, சந்தைப்படுத்துவதில் நெருக்கடி என வடபகுதி மீனவர்களின் துன்பங்கள் தலைக்கு மேலாகவுள்ளன.

இந்தப்பின்னணியில் இந்திய மீனவர்களுக்கு வாரத்தில் சில தினங்களுக்கு வடபகுதியில் மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பது குறித்து ஆராயப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் உறுதிப்படுத்தியிருந்தார். இதற்கான எதிர்ப்புக்கள் அதிகரித்திருக்கும் நிலையில், இவ்வாறான திட்டங்கள் எதுவும் இல்லை என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்போது தெரிவித்திருக்கின்றார். எந்த அமைச்சர் சொன்னது உண்மை என்பதை அறிய பொறுத்திருப்போம்.

ஆனால், வடபகுதி மீனவா-கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து உடனடிக் கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவையை இந்த அறிவிப்பு வெளிப்படுத்தியிருக்கின்றது. காலம் தாழ்த்தாமல் அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நாமும் வலியுறுத்துகின்றோம்.

# அன்புள்ள ஆசிரியருக்கு.






## மலையகப் பொருளாதாரம் குறித்து.....

கொரோனா முடக்கம் - பொருளாதார நெருக்கடிகளினால் அச்சு அதழ்கள் பல மூடுவிழா கண்டுள்ள சமகாலத்தில் தமிழர் பொருண்மியம் எனும் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டு தற்றுணிவுடன் அச்சு இதழ் ஒன்றை ஆரம்பித்து இன்று 07 ஆவது இதழாக எம் கரம் கிட்டியது மனதுக்கு மகிழ்ச்சி.

வாராந்தம் பக்கங்களை எப்படியாவது நிரப்ப வேண்டும் என்று அல்லாமல் வாரந்தோறும் பல புதுமையான கனதியான நடைமுறை விடயங்களுடன் இவ்விதழ் வருவது சிறப்பு. வாசிக்க ஆர்வத்தைத் தூண்டும் நேர்த்தியான பக்க வடிவமைப்புடன் துறைசார் முக்கிய ஆளுமைகளின் ஆக்கங்கள், பல நேர்காணலுடன் வெளிவருவதும் சுய தொழில் செய்பவர்களை ஊக்குவிப்பதுமாக அவர்களது விடயங்களும் பதிவிட்டு வெளிவருவது பலருக்கு ஊக்கமளிப்பதாக இருப்பது வரவேற்கத்தக்கது.

ஒரு குறையாக நான் கருதுவது என்னவென்றால், இலங்கையின் தேசிய பொருளாதாரத்துக்கு முதன்மையாகச் செயற்படும் தேயிலைத் தொழிலைப் பிரதானமாகக் கொண்டு வாழும் மலைவாழ் தமிழர்களின் பொருளாதார விடயங்களையும் பொருண்மியம் உட்சேர்த்தால் மேலும் கனதியாக இருக்கும் என நினைக்கின்றேன். நன்றி!

**சதா - அட்டன்**

●●●

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தா தாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House Pvt Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்கு செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ----------------------------------------------------


**முகவரி** - ----------------------------------------------------

**தொலைபேசி இலக்கம்** - ------------------------------------

**சந்தாக் காலம்** - ---------------------------------------------

**செலுத்திய தொகை** - ----------------------------------------

**செலுத்திய திகதி** - ---------------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,68,250 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,83,500 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** அவசர தேவை ஒன்றுக்கு கடனைப் பெறமுடியாத அளவுக்கு வங்கிகளும், நிதி நிறுவனங்களும் வட்டியை உயர்த்திவைத்துள்ளன. இந்த வட்டி வீதம் குறையும் வாய்ப்புள்ளதா?

**கே.கலைவாணி**
**வாழைச்சேனை, மட்டக்களப்பு**

**பதில் -** வட்டி வீதங்கள் உடனடியாகக் குறைவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. தனியார் நிதி நிறுவனங்கள் கூட அதிக ளவு வட்டியைத்தான் அறவிடுகின்றன. உதாரணமாக சில நிறுவனங்கள் 30 வீதத்துக்கும் அதிகமான வட்டியை அறவிடுகின்றன.

நாட்டில் பணவீக்கம் அதிகமாக இருப் பதாலும், அதிகளவு நாணயத் தாள் களை அரசாங்கம் அச்சடித்து வெளியிட் டிருப்பதாலும், பணப்புழக்கத்தை குறைப் பதற்கான ஒரு உபாயமாக இவ்வாறு வட்டி வீதங்கள் அதிகரிக்கப்பட்டிருக் கின்றது.

சர்வதேச நாயண நிதியம் தற்போதைய வட்டி வீதத்தை இன்னும் அதிகரிக்க வேண்டும் என்று அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்திருக்கின்றது. அதனை அரசாங்கம் ஏற்காமையால், இந்தள விலாவது வட்டி வீதம் உள்ளது என நிம்மதி அடையலாம்.

பொருளாதார நிலைமை சுமூகமான நிலைக்குத் திரும்பும்போது இந்த வட்டி வீதமும் குறைவடைவதற்கான வாய்ப் புக்கள் உள்ளன. அதுவரையில் பொறுத் திருப்பதைவிட வேறு வழியில்லை.

**கேள்வி -** இந்தியாவிலிருந்து முட்டை களை இறக்குமதி செய்வதால் உள்நாட்டு சந்தையில் அதன் விலை குறைவடை யுமா?

**எம்.கண்ணன்,**
**புதுக்குடியிருப்பு.**

**பதில் -** இறக்குமதி செய்யப்படும் முட்டை கள் பேக்கரிகளுக்கு மட்டும்தான் கொடுக் கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இதன்மூலமாக கேக் போன்றவற்றின் விலைகள் குறையும் என்ற எதிர்பார்ப்பும் வெளியிடப்படுகின்றது.

முட்டை உற்பத்தியாளர்கள் சீற்றம டைவார்கள் என்பதால்தான் இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் பேக்கரிகளுக்கு மட்டும்தான் கொடுக்கப்படும் என அரசாங் கம் தெரிவித்திருக்கின்றது. ஆனால், பேக் கரிகளுக்கு கொடுக்கப்படும் முட்டைகள் கடைகளுக்கு வராது என்பதற்கு எந்தவித மான உத்தரவாதமும் இல்லை.



அதேவேளையில், பேக்கரிகளுக்குத் தான் வழங்கப்பட்டாலும் கூட உள்நாட்டில் உற்பத்தியாகும் முட்டைகளுக்கான கேள்வி குறைய அதன் விலையும் வீழ்ச்சியடை வது தவிர்க்க முடியாததுதான். இது உள்ளூர் உற்பத்தியாளர்களை மோசமாகப் பாதிக் கும்.

நாடு அந்நியச் செலாவணிப் பிரச்சி னையை நாடு எதிர்கொண்டிருக்கும் நிலையில், கோழித் தீன் போன்றவற்றின் விலையைக் குறைப்பதற்குப் பதிலாக முட்டை இறக்குமதிக்கு கதவைத் திறந்து விட்ட அரசாங்கம் அந்த வகையில், இந்த நாட்டின் பொருளாதாரத்தை பாதுகாக்கும் என எவ்வாறு நம்ப முடியும்?

**உங்களுடைய கேள்விகளை அனுப்பி வைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி**
**tamilseconomy@gmail.com**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 280/= |
| உருளைக்கிழங்கு | - 160/= |
| பச்சைமிளகாய் | - 350/= |
| தக்காளி | - 120/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 180/= |
| கோவா | - 100/= |
| கரட் | - 200/= |
| பூசணி | - 80/= |
| புடோல் | - 200/= |
| வாழைக்காய் | - 160/= |
| சின்ன வெங்காயம் | - 280/= |
| பெரிய வெங்காயம் | - 150/= |
| பாகற்காய் | - 550/= |
| வெண்டக்காய் | - 350/= |
| கருணைக்கிழங்கு | - 100/= |
| பயற்றங்காய் | - 350/= |
| லீக்ஸ் | - 260/= |
| பீற்றூட் | - 200/= |
| கறிமிளகாய் | - 550/= |
| முருங்கைக்காய் | - 1800/= |
| போஞ்சி | - 200/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 239/= |
| கனடா டொலர் - | 261/= |
| சீன யுவான் - | 50/= |
| யுரோ - | 376/= |
| ஜப்பான் யென் - | 2.6/= |
| சிங்கப்பூர்டொலர் - | 263/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 428/= |
| சுவிஸ் பிராங் - | 378/= |
| அமெரிக்க டொலர் - | 357/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 249/= |
| கனடா டொலர் - | 274/= |
| சீன யுவான் - | 53/= |
| யுரோ - | 390/= |
| ஜப்பான் யென் - | 2.7/= |
| சிங்கப்பூர் டொலர் | 274/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 444/= |
| சுவிஸ் பிராங் - | 395/= |
| அமெரிக்க டொலர் - | 366/= |

# ஐ.எம்.எப்.பின் நிபந்தனைகள் .....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு வருடங்களில் இந்தத் தொகை கிடைக்கும் என்றால், ஒரு மாதத்துக்கு அல்லது ஒரு வருடத்துக்கு கிடைக்கும் தொகை மிகவும் குறைவானது. அதனால், இலங்கையின் பிரச்சினைக்கு இந்த ஐ.எம்.எப். வழங்கப்போகும் நிதி உடனடியான தீர்வைக் கொண்டுவராது. ஆனால், ஐ.எம்.எப். கடன் வழங்கினால் ஏனைய நாடுகள் இலங்கைக்கு உதவுவதற்கு முன்வரலாம் என்ற ஒரு எதிர்பார்ப்பு காணப்படுகின்றது. அதன் அடிப்படையில் வேறு சில உதவிகளைப் பெற்று இலங்கைக்குத் தேவையான சில உதவிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

ஆனால், ஐ.எம்.எப்.பின் நிபந்தனைகளில் ஒன்றுதான் மின் சாரத்துக்கான மானியத்தை நீக்கி மின்சாரக் கட்டணத்தை அதிக ரிக்க வேண்டும் என்பது. அதனைவிட வரிமான வரியை 36 முதல் 40 வீதமாக அதிகரிக்க வேண்டும் என்பதும் ஐ.எம்.எப். பின் ஆலோசனைகளில் ஒன்று. இவற்றை அரசாங்கம் செய்திருக் கின்றது. அதேபோல சமுர்த்தி போன்ற சமூகக் கொடுப்பனவுகளை குறைக்க வேண்டும் என்பதும் ஐ.எம்.எப்.பின் கட்டாய நிபந்தனை. அரசாங்க சேவையில் ஆட்களைக் குறைக்க வேண்டும் என்பதும் ஐ.எம்.எப்.பின் நிபந்தனைகளில் ஒன்றாக இருப்பதால், அரசாங்க சேவைக்கு புதிதாக ஆட்களைச் சேர்ப்பது நிறுத்தப்பட்டுள்ளது.

இது போன்ற நிபந்தனைகளை ஐ.எம்.எப். விதிக்கும்போது இலங்கை மக்கள் அரச மானியங்கள், அரசாங்கத்தால் வழங்கப்ப டும் சமூகக் கொடுப்பனவுகள், இலவச சுகாதாரம், இலவச கல்வி, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் போன்ற அரசாங்கத்தால் வழங் கப்படும் பல சலுகைகளை இழக்க வேண்டிய நிலை ஏற்படும். திடீரென இவை இடம்பெறுவதால் மக்கள் மத்தியில் அமைதியற்ற நிலை ஏற்பட்டு, அரசியல் ரீதியாக கொந்தளிப்பான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி அதன் காரணமாக இலங்கையில் ஸ்திரமற்ற ஒரு அரசியல் நிலையை ஏற்படுத்தலாம். இவ்வாறான ஒரு நிலைமை ஏற்படுவது நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் உறுதியான தீர்மானங்களை எடுப்பதற்கு வழிவகுக்காது.

ஆகவே, ஐ.எம்.எப்.பின் நிபந்தனைகள் இலங்கையில் ஸ்திர மற்ற, கொந்தளிப்பான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கலாம். உலகின் பல நாடுகளில் இவ்வாறு இடம் பெற்றிருக்கின்றது.

**கேள்வி -** கடன்மறுசீரமைப்பு தொடர்பில் சீனா எடுத்திருக்கும் இறுக்கமான நிலைப்பாடு, இலங்கை பொருளாதாரப் பிரச்சினை களிலிருந்து மீள்வதற்கும், ஐ.எம்.எப்.பின் கடனுதவியைப் பெறு வதற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கருதுகின்றீர்களா?

**பதில் -** நிச்சயமாக. ஏனெனில் இலங்கைக்கு கடன்வழங்கிய நாடுகளில் அதிகளவுக்கு கடன்வழங்கிய நாடாக சீனா காணப்படு கின்றது. கடன் மறுசீரமைப்பைப் பொறுத்தவரையில் குறுகிய காலத்துக்குள் - அதாவது இரண்டு வருடத்துக்குள் அதனை செய்ய வேண்டும் என சீனா எதிர்பார்க்கின்றது. இலங்கையின் பொருளாதாரக் கொள்கை தற்போது மேற்கு நாடுகள் மற்றும் இந்தியா சார்ந்ததாக இருப்பதால் தமது நிலைப்பாட்டில் இறுக்கமாக சீனா இருக்கலாம். இலங்கையில் சீனாவின் முதலீடுகள் அதிக மாகக் காணப்படுகின்றது. இதனால், இலங்கையின் பொருளா தாரத்தில் அதிகளவு செல்வாக்குச் செலுத்தும் நாடாக சீனா மாற்றமடைந்திருக்கின்றது.

இலங்கைக்கு இப்போது அதிகளவு கடன்களை வழங்க அமெரிக்கா முன்வந்திருக்கின்றது. இந்த நிலையில் சீனா தமது நிலைப்பாட்டில் இறுக்கமாக இருப்பது இலங்கையை மையப்படுத் திய அமெரிக்க - சீனா பனிப்போரின் பிரதிபலிப்பாகவே காணப்படு கின்றது. இந்தப் போரின் விளைவுகளை இலங்கை எதிர்நோக்க வேண்டியிருக்கும். ஆகவே, ஐ.எம்.எப். கொடுக்கும் நிதி, கடன் களை மீளச் செலுத்துவதற்குப் பயன்படுத்த முடியாது. இந்தப் பின்னணியில் சீனாவின் இறுக்கமான நிலைப்பாடு பொருளாதார ரீதியாக இலங்கையை திக்குமுக்காடச் செய்யும் நிலையை ஏற்படுத்தும்.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/- (USD 550)
பரப்பு 20 இலட்சம் (USD 5,500)
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


## வரி விளம்பரம் classified advertisement




### SALE விற்பனைக்கு

ஆண் வான்கோழிகள் விற்பனைக்கு உண்டு. முரசுமோட்டை கிளிநொச்சி
+94 76 832 7679

---

இயற்கை வழி முறையில் உற்பத்தி செய்யப்பட்ட உருளை கிழுங்கு ,இராச வள்ளி கிழங்கு என்பன இராவணா பண்ணையில். பிரசாத் - 0770076223

---

மருத்துவ செவ்வாழைப் பழம் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு கோகுலன் 077 979 7402

---

இயற்கை முறையில் கலப்படம் இல்லாமல் உற்பத்தி செய்யப்படட தேன் கிடைக்கும். மதுரம் தேனீப்பண்ணை காரைநகர். நிரோஷன் 077 578 9342

---

இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிவகைகளை பெற்றுக்கொள்ள உசன ராமம் இயற்கை விவசாய பண்ணை. பவன் 076 444 7778

---

விதை உழுந்து 100 kg உள்ளது 1kg 1000/= சந்திவெளி 077 131 7260

---

ஒரு மாதக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. 0767917735 யாழ்ப்பாணம் லங்கா பண்ணை

---

உங்கள்வீடுகளுக்கு சூரிய படலங்களால் மின்னூட்டுங்கள். 0766263920 விமல், வவுனியா

---

பயறுஉளுந்துநிலக்கடலைவிற்பனைக்கு வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். -0777 90 6383. இந்திரா குழுமம். கிளிநொச்சி

---

ஒரு நாள் பத்து நாள் ஒரு மாத கோழி குஞ்சுகள் விற்பனை பரந்தன் கிளிநொச்சி
742242067

---

மரக்கறிகள் பழங்கள் நேரடி வீட்டு விநியோகம். விநியோக கட்டணம் உண்டு.
FreshMart - 0777 90 6383

---

முழு உழுந்து உடைக்கும் இயந்திரங்கள் விற்பனை. லட்சுமி மோட்டார்ஸ் கிளிநொச்சி 0775070675

---

மாட்டுக்கான அடர் தீவனம் விற்பனை
+94778586884 ராணி தீவனம் தருமபுரம்

---

கோழி தீவனங்கள் மாட்டு தீவனங்கள் தொகையாக தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்
+94771117080 கொழும்பு

---

தரமான காய்கறி மற்றும் பூ மரக்கன்றுகள் அலங்கார தாவரங்கள் விற்பனை
+94768965999 - வன்னி மலர் காடு கிளிநொச்சி

---

பிவிசி குழாய்களை மொத்தமாக குறைந்த விலைகளில் பெற்றுக் கொள்ள
PVC.LK, கிளிநொச்சி - 0777885114

---

இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உழவு இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு 0777 90 6383. இந்திரா குழுமம்

---

மாட்டு தீவன ஊறுகாய்ப்புல் அல்லது சைலேஜ் விற்பனை மாங்குளம். 0775138954

---

இரசாயன கிருமிநாசினிகள் பூச்சி நாசினிகள் தெளிக்கப்படாத (செயற்கை உரம் இட்ட) வெள்ளை சிவப்பு நெல் மற்றும் அரிசிகள் விற்பனை. 0777 90 6383 இந்திரா குழுமம்

---

தேனீ வளர்ப்பு பெட்டிகள் விற்பனைக்கு உண்டு. 766484625 மதுரம் தேனீ பண்ணை, காரைநகர்.

---

மருத்துவ செவ்வாழை பழம் விற்ப சுகா தார முறைப்படி விசேடமாகத் உற்பத்தி செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெய்.
OPHRAH PRODUCTS
ஒப்ரா உற்பத்தி
0702730545
0762830545

---

வைக்கோல்தேவையானவர்கள்தொடர்பு கொள்ளவும். 775990554

---

கோழி எரு விற்பனைக்குண்டு.
(இரண்டு வருடங்கள் கிடங்கினுள் இடப்பட்டுள்ளது )
இடம் - வவுனியா 0776429710

### வாகனம் வாடகைக்கு

கார்கள் சாரதியுடனும் சாரதி இல்லாமலும் வாடகைக்கு கிடைக்கும்.
0766263920
டிலைட் கார். வவுனியா

(08ஆம் பக்கம் பார்க்க)

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட
0777 27 69 49 | 076 443 8622
#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்

## classified advertisement




வட மாகாணத்தில் டிப்பரில் கல் மண் கட்டட பொருட்கள் ஏற்றி தரப்படும்.
0777738536

---

ஜேசிபி கனரக வாகன சேவை கிளிநொச்சி 0773597787

---

கொழும்பு யாழ்ப்பாண மின்சாரக் கார். வாடகை சேவை. 0779744972

---

### சேவை

கிளிநொச்சியில் நெல் கொள்வனவு செய்கின்றோம் ஜஸ்மின் மில் புளியம் பக்கணை 769966594

---

கிளிநொச்சி இரணைமடு தானியக் களஞ்சியத்தில் நெல் களஞ்சியப்படுத்த முடியும்.-773043368

---

வட மாகாணத்தில் இனி வரும் சிறு போகத்தில் இயந்திரத்தினால் நெல் நடவு செய்து தரப்படும். 0777 90 6383 இந்திரா குழுமம் கிளிநொச்சி

---

உணவு பால் உற்பத்தி சார்ந்த தொழில் நுட்ப ஆலோசனைகளுக்கு அழையுங்கள்
0772281413 கிஷோ. Nutra Tec

---

விவசாய இயந்திர வாகன உதிரிப்பா கங்கள் தோட்டங்கள் வயல்களுக்கு மற்றும் திருத்தல் நிலையங்களுக்கு நேரடி விநியோகம் கிளிநொச்சி.
765651141 கவியார்த்தனன்

---

உணவு விற்பனை நிலையங்களுக்கு மற்றும் விசேட நிகழ்வுகளுக்கு பஜ்ஜி செய்து தரப்படும். 0777885114

---

மரச்செக்கு சேவைகளுக்கு மோகன் மரச்செக்கு வட்டக்கட்சி +94770156630

---

கிளிநொச்சியில் வீட்டு மின் இணைப்பு நீர் குழாய் பொருத்துதல் வேலைகளுக்கு 742242067

---

வட மாகாணத்தில் உயிர் வாயு தொகுதி ஒன்றை பொருத்திக் கொள்ள 0763103565 சுரேன் . Thaayin Care PVT LTD

---

பாலிமர் ரப்பர் முத்திரை ஒரு மணித்தியாலத்தில் செய்து தரப்படும். சிவா பிரின்டர்ஸ் கிளிநொச்சி. 0775346766

---

உங்கள் வியாபாரங்களுக்கு இணைய தளங்கள் மென்பொருள் சேவைகள் வழங்குகின்றோம். +94774404456 அகமதி குழுமம் Kilinochchi

---

உங்கள் வீட்டு நல்ல நிகழ்வுகளுக்கு இயற்கையான உடன் தயாரித்த பழரச பானங்களை வழங்குகின்றோம். 212 285726. - அம்மாச்சி கிளிநொச்சி

---

வானிலை தகவல்களை தினமும் இலவசமாக தெரிந்து கொள்ள இந்த இலக்கத்திற்கு ஒருமுறை **whatsapp** செய்யுங்கள்
0772984757
**www.agricultureinformation.lk**

---

இலங்கை முழுவதும் விதைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
0763804310 அபி அக்ரோ யாழ்ப்பாணம்

---

இயற்கை முறையில் காய்கறிகள் பழங்கள் உற்பத்தி செய்பவர்கள் தொடர்பு கொள்ளவும் விற்பனை வாய்ப்பு செய்து தரப்படும்
0777 90 6383 **FreshMart Online Veg Store**

---

உங்கள் விவசாய பண்ணைகளில் விளைச்சலைக் கூட்ட வேண்டுமா??
தேனீ பெட்டி வைத்து பராமரித்து தரப்படும். 766484625 மதுரம் தேனீ பண்ணை. காரைநகர்.

---

### வேலைவாய்ப்பு

முல்லைத்தீவு அளம்மில் பகுதியில் பண்ணை வேலைகளுக்கு ஆள் தேவை
0774292500

---

விசுவமடுவில் பண்ணை வேலைக்கு ஆள் தேவை தங்கி நிற்பவர்கள் விரும்பத்தக்கது
774939391

---

காரைநகரில் "பல்லுயிர்" பனை சார் உற்பத்தி விற்பனை நிலையத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை
+94775789342

---

உளவியந்திர சாரதி தேவை கிளிநொச்சி
0776737535

---

### தேவை

காரை நகரில் நெல் அறுவடை செய்யும் இயந்திரம் தேவை நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் வெட்டலாம்
+94775789342

---

விதை இஞ்சி விதை மஞ்சள் தேவை கண்டிக்கு அனுப்பக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
0777 90 6383

---

விவசாய தகவல்கள் தமிழ் இணைய வலைதளத்திற்கு கட்டுரைகள் ஆக்கங்கள் தேவை.
0772984757

---

விதை இஞ்சி விதை மஞ்சள் தேவை கண்டிக்கு அனுப்பக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
0777 90 6383

---

பாரிய ஒருங்கிணைந்த பண்ணைகள் அமைக்கக்கூடிய 25 ஏக்கர் 50 ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்ட காணிகள் தேவை. இந்திரா குழுமம்.
0777 90 6383

---

மாட்டு தீவனத்துக்காக புல் பயிர் செய்கை செய்து தரக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
ஒரே பிரதேசத்தில் 50 தொடக்கம் 100 ஏக்கர் வரை தேவை.
0777 90 6383
இந்திரா குழுமம் கிளிநொச்சி

---

காய்ந்த பச்சை ஒடியல் தேவை.
(புழுக்கொடியல் தேவையில்லை )
இருந்தால் அழைக்கவும்.
0773735261

### கல்வி

பகுதி நேர விவசாய NVQ 3 & 4 நேரடி செயல்முறை கல்வி.
0777 90 6383 இந்திரா குழுமம் கிளிநொச்சி

---

அபாகஸ் வகுப்புகள் கிளிநொச்சி
0094779361624

---

வீடுகளுக்கு வந்து மாணவர்களுக்கு பாடங்கள் கற்பிப்பதோடு வயது வந்தவர்களுக்கு Spoken English உம் போதிக்கப்படும்.
0768324686
வண்ணார்பண்ணை




# வாழைப்பழத்திலும் விதைகள் உண்டு!

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தத்துவவியல் பேராசான் கலாநிதி காசிநாதன், பதினைந்து வருடங்களுக்கு மேலாக மெல்பனில் வாழ்கிறார். இருந்தாலும் பொது வெளியில் அவர் தன்னைப் பெரிதும் அடையாளப்படுத்திக் கொள்வதில்லை. இப்படிச் சிட்னியில் அமைதியாக வாழும் இன்னொரு பேராசிரியர், கலாநிதி இந்திரபாலா. இவருடன் எனக்குப் பெரிய தொடர்பில்லை. காணுமிடத்தில் வணக்கம் சொல்லி மரியாதை செலுத்துவதுடன் சரி. இந்த வரிசையில் இணைந்து கொள்ளும் இன்னுமொருவர் சிட்னியில் வாழ்ந்து மறைந்த (2019) தமிழ்ப் பேராசிரியர் பொன் பூலோகசிங்கம். இவர்கள் எல்லோரும், எமது சமுதாயத்தின் பொக்கிஷங்கள்.

கலாநிதி காசிநாதனுடன் நான் அடிக்கடி தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசுவேன். அவருடன் பேசுவது உவப்பானது. பல விஷயங்களை அவரிடமிருந்து அறிந்து கொள்ளலாம். சமீபத்தில் அவருடன் பேசிய போது, தனது பின் வளவில் செழிப்பாக வளர்ந்த வாழையொன்று ஐந்து சீப்பில் குலை தள்ளியிருப்பதாகச் சொன்னார்.

அப்படியா? என நான் ஆச்சரியப்பட்டேன். ஐந்து சீப்பில் வாழை குலை தள்ளுவது ஒன்றும் புதினமில்லை. ஆனால் அவர் வாழும் மெல்பனில் அது ஆச்சரியம்தான்.

அவுஸ்திரேலியா ஒரு நாடு மட்டுமல்ல, கண்டமும்கூட! இங்கு வெப்ப வலயம், உபவெப்ப வலயம், குளிர் வலயம் என மூன்று மண்டலங்களும் உண்டு. பூமத்தியரேகைக்கு கீழே, பூமிப்பந்தின் தென் முனைப் பக்கமாக ஆஸ்திரேலியா அமைந்திருக்கிறது. இதனால் பூமத்தியரேகைக்கு மேலே இருக்கும் நாடுகளுக்கு, அவற்றின் குளிர் காலங்களில் விவசாய உற்பத்திகளைப் பெருமளவு ஏற்றுமதி செய்யமுடியும். இதுவே இந்த நாட்டுப் பொருளாதார வெற்றியின் சூக்குமம் எனச் சொல்வார்கள்.

இந்தவகையில் பலதும் பத்தும் பேசிய காசிநாதன் சுழன்றடித்து மீண்டும் வாழைக் குலை விஷயத்துக்குவந்து, "வாழைப் பழம் நிறைய பெரியபெரிய கொட்டைகள் இருக்குதடாப்பா" எனச் சொல்லிச் சிரித்தார்.

காலாதிகாலமாக, எமக்குத் தெரிந்த வாழைப்பழத்தில் விதைகள் இல்லை. அன்னாசியிலும் இல்லை. பிற்காலங்களில் இனவிருத்தி செய்யபட்ட திராட்சை, தர்பூசணி, பப்பாளியிலும் விதைகள் இல்லை. இதுபற்றிய விபரம் அறியவே காசிநாதன் என்னைத் தொடர்பு கொண்டார் என்பதைப் புரிந்துகொண்டேன். அவர் தனது துறை சார்ந்த நூல்கள், மட்டுமல்ல அதற்கு வெளியேயும் நியை வாசிப்பவர். அதனால் அறிவியல் ரீதியாக அவருக்கு விளக்கம் சொன்னேன்.

"இருமடிய" (Diploid) தாவரங்க ளில் விதைகள் இருக்குமென்றும் "மும் மடிய" (Triploid) தாவரங்கள் விதைகளற்ற பழங்களைக் கொடுக்குமென்றும், அவரது வாழை "இருமடிய" வாழை என்றும் சொன்னதும் அவர் சட்டெனப் புரிந்துகொண்டார்.

சமையல் அறையில் மொந்தன் வாழைக் காயைப் பொரிக்கவென தோல் சீவிக் கொண்டிருந்த என்னுடைய மனவிக்கு, எமது தொலைபேசி உரையாடல் கேட்டிருக்கவேண்டும். வாழைக்காயும் கத்தியுமாக என்முன் வந்தமர்ந்து, இதைக் கொஞ்சம் விபரமாகச் சொல்லுங்கோ என்றார்.

ஒரு உயிரினம் எப்படி அமையவேண்டும் என்ற தகவல்கள் எல்லாம் கலத்தினுள்ளே (Cell) நூல்போன்ற அமைப்புடைய குரோமசோம்களில் (நிறமூர்த்தம்) பதியப்பட்டிருக்கும். இவை பெரும்பாலும் சோடி சோடியாக இருக்கும். இவற்றை இருமடிய தாவரங்கள் என்போம். உலகில் பெரும் பாலானவை இந்த வகையே. இதேவேளை மூன்று நிறமூர்த்தங்கள் சேர்ந்திருந்தால் அவை மும்மடியம்.

இரண்டடுக்கு குரோமசோம் கொண்ட இருமடிய தாவரங்களில் விதைகள் இருக்கும். அற்றை மூன்றடுக்கு குரோமசோம்கள் கொண்ட தாவரங்களாக மாற்றிவிட்டால், அவைகள் விதைகளற்ற காய் கனிகளைக் கொடுக்கும், அப்படித்தானே? என, எனது விளக்கத்தை இலகுவாக்கினாள் மனைவி. அவளும் அடிப்படை விஞ்ஞானம் படித்தவள்.

உண்மைதான். ஆதிகாலத்தில் எல்லா வாழைப்பழத்துக்கும் விதைகள் இருந்தன. அவை இன்றும் காடுகளிலும் மலைகளிலும் வளர்கின்றன. அதிலொன்றுதான் காசிநாதன் வீட்டு பின்வளவில் குலை போட்ட வாழை.

கால ஓட்டத்தில் விதைகொண்ட வாழைகள் இன விருத்தியடைந்து விதைகளற்றவை ஆகின.

எப்படி? இயற்கையாகவா செயற்கையாகவா?

அயல் மகரந்தச் சேர்க்கை மூலம் அல்லது இடி, மின்னல், வெப்பம் காரணமாக மிகமிக நீண்ட காலங்களுடாக, மூன்றடுக்கு குரோமசோம்கள் கொண்ட, விதைகளற்ற வாழைகள் இயற்கையாக விருத்தியடைந்தன.

மற்றத் தாவரங்களில்?

அவை செயற்கை முறையில் குறுகிய காலத்துக்குள் மாற்றப்படடவை. தர்பூசனி, பப்பாளி போன்றவை இதற்கு நல்ல உதாரணங்கள்.

அப்போ, விதைகளற்ற தாவரங்களின் இனப் பெருக்கம்?

"பதிய" முறைகளின் மூலம்தான்! ஆனால் பப்பாளி, தர்பூசனி ஆகியனவற்றின் (மும்மடிய) விதைகளை வியாபார நிலையங்களில் வாங்கலாம். அவற்றிலிருந்து வளரும் தாவரங்கள், காய்கனிகளைக் கொடுக்கும். ஆனால் அவற்றில் விதைகள் இருக்காது.

என்ன அதிசயமாய் இருக்கு! அவங்கள் விதை விக்கிறாங்கள். ஆனால் அற்றிலிருந்து வளர்பவை விதைகளைக் கொடுக்காது? இது கொஞ்சமும் லொஜிக்காக இல்லையே!

உண்மைதான். உதாரணத்துக்கு தர்பூசனியை எடுப்போம். இதன் விதைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களிடம், நாலடுக்கு (Tetraploid) குரோமசோம்கள் கொண்ட தர்பூசனித் தாவரம் இருக்கிறது. பெரும் பணம் செலவு செய்து, அதை ஆராச்சி மூலம் விருத்தி செய்திருப்பார்கள். இது அவர்களின் பணம்காய்க்கும் மரம். இதை அவர்கள் வெளியில் விடமாட்டார்கள். இதனுடன் இரண்டடுக்கு குரோமசோம்கள் (இருமடியம்) கொண்ட சாதாரண தர்பூசனியை, மகரந்தச் சேர்கை மூலம் கலப்பார்கள்.

இக்கலப்பின் மூலம் உருவாகும் தாவரம், விதைகளை உற்பத்தி செய்யும். இந்த விதைகளைத்தான் விவசாயிகளுக்கு விற்பார்கள்.

இந்த விதைகளை விதைத்தால்?

அவை முளைத்து, வளர்ந்து பழம் கொடுக்கும். ஆனால் அதில் விதைகள் இருக்காது. இதுதான் நாமெல்லோரும் விரும்பும் சீட்லெஸ் தர்பூசனி! இது ஒரு வகையில் பன்னாட்டு நிறுவனங்கள், உலக விவசாயத்தில் செலுத்தும் ஆதிக்கம் என்றும் சொல்லலாம்.

தமிழர் பொருளியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
05.03.2023




AGS. சுவாமிநாதன் சர்மா
நிர்வாக இயக்குனர் @ A. G. Sarma & Co., (CA) பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

# சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீடு

2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தின் அமுலாக்கம் SSCL

**1. விதிப்பனவு**

ஒக்டோபர் 01, 2022 முதல் - 2.5% விதிக்கப்படும்.

**2. பொறுப்பின் நோக்கம் (பிரிவு 2)**

பின்வரும் ஒவ்வொரு நபரினாலும் சமூக பாதுகாப்பு உதவுதொகை அறவீடு செலுத்தப்படுதல் வேண்டும்.

* ஏதேனும் பொருட்களை இறக்குமதி செய்தோ,

* பொருட்களை உற்பத்தி செய்யும் வியாபாரத்தை மேற்கொண்டோ,

* எந்தவொரு வகையிலான சேவையை வழங்கும் வியாபாரத்தை மேற்கொண்டோ, அல்லது

* பந்தி (2)இன் ஏற்பாடுகள் ஏற்புடைய உற்பத்தியாளராக காணப்பட்டு, அந்த பொருட்களின் உற்பத்தியாளரின் விற்பனை தவிர்ந்த அத்தகைய பொருட்களின் இறக்குமதி மற்றும் விற்பனை அடங்கலாக ஏதேனும் பொருட்களின் மொத்த அல்லது சில்லறை விற்பனையின் வியாபாரத்தை மேற்கொள்ளும்

**3. பதிவு (பிரிவு 4)**

ஏதேனும் பொருட்களை இறக்குமதி செய்யும் வரியிடற்பாலதான நபர்கள் தவிர்த்து, ஒவ்வொரு வரியிடற்பாலதான நபர்களும் (2ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள நபர்கள்), பதிவு செய்வதற்கு தேவைப்படுத்தப்படுகின்றனர்

**ஏற்கனவே ரூபா 120 மில்லியன் இனை விஞ்சிய புரள்வை உடைய நபர்**

விலக்களிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளிலிருந்தான புரள்வினை தவிர்த்து, சா.பா.உ.அ சட்டம் செயற்பாட்டிற்கு வரும் திகதிக்கு உடன் முந்திய பன்னிரண்டு மாதங்களினுள் மொத்த புரள்வு ரூபாய் 120,000,000 இனை விஞ்சுமாயின் சா.பா.உ.அ சட்டம் செயற்பாட்டிற்கு வரும் திகதியிலிருந்து 15 நாட்களுக்குள்.

உதாரணம்: 01.10.2021 முதல் 30.09.2022 வரையிலான காலப்பகுதிக்கு புரள்வானது, (மொத்த புரள்வு - விலக்களிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள்) ரூபா 120 மில்லியனை விட அதிகமாயின், அத்தகைய நபர்கள் 2022 October 15 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பதிவு செய்ய தேவைப்படுத்தப் படுகின்றனர்.

**வேறு எவரேனும் நபர்கள்**

வேறு எவரேனும் நபர்களுக்கு காலாண்டு ஒன்றுக்கு ரூபா 30,000,000 (மேலே விடயம் (i) இற்கு உட்படாத நபராயின்) புரள்வானது காலாண்டு ஒன்றுக்கு ரூபா 30 மில்லியனை விஞ்சும் திகதியிலிருந்து 15 நாட்களுக்குள் பதிவு செய்ய தேவைப்படுத்தப்படுகின்றனர்.

ச.பா.உ.அ. (SSCL) இற்கு பதிவு செய்த பின்னர் ச.பா.உ.அ. (SSCL) ஆனது, பதிவிற்கான புரள்வு எல்லையை பொருட்படுத்தாது செலுத்தப்படுத்தல் வேண்டும்.

* வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) உள்ள நபர்கள், - முறையாக பூரணப்படுத்தப்பட்ட வரி வகைப் பதிவுப் படிவத்தினை TPR_005 (SSCL) சமர்ப்பித்து பதிவினை மேற்கொள்ளலாம்.

* ஏனைய நபர்கள் (வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் அற்றோர்) - வரி செலுத்துநர் அடையாள இலக்கத்தை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். பின்பு முறையாக பூரணப்படுத்தப்பட்ட வரி வகைப் பதிவுப் படிவத்தினை TPR_005 (SSCL) சமர்ப்பித்து பதிவினை மேற்கொள்ளலாம்.

* பின்வரும் - அலகுகளில் (இறைவரித் திணைக்களம்) சமர்ப்பித்து பதிவினை மேற்கொள்ளலாம்.

- தலைமைக் காரியாலயம் மற்றும் சாரணர் கட்டிடத்தில் கையாளப்படும் வரிக்கோவைகளுக்கு, தலைமை காரியாலயத்திலுள்ள வரி வகைப்பதிவு அலகு.

- நகர / பிராந்திய அலுவலகம் எவற்றிலேனும் கையாளப்படும் வரிக்கோவைகளுக்கு ஏதேனும் நகர / பிராந்திய அலுவலகம்.

**4. ச.பா.உ.அ. இன் கொடுப்பனவு (பிரிவு 17)**

ச.பா.உ.அ. ஆனது சுய மதிப்பீட்டின் பேரில் 3 தவணைகளில் செலுத்தப்படத்தக்கது.

கொடுப்பனவை செலுத்துவதற்கான திகதிகள் பின்வருமாறு.

* 1 ஆம் தவணை - முதலாம் மாதத்திற்கான வரிச்செலுத்துகையானது ஏற்புடைய காலாண்டின் இரண்டாவது மாதத்தின் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

* 2 ஆம் தவணை - இரண்டாம் மாதத்திற்கான வரிச்செலுத்துகையானது ஏற்புடைய காலாண்டின் மூன்றாவது மாதத்தின் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

* 3 ஆம் தவணை - மூன்றாம் மாதத்திற்கான வரிச்செலுத்துகையானது ஏற்புடைய காலாண்டின் இறுதியின் உடன் அடுத்து வரும் மாதத்தின் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

i. கொடுப்பனவு நறுக்கில் உள்ளடக்கப்பட வேண்டிய விபரங்கள்

கொடுப்பனவு காலப்பகுதிக் குறியீட்டு வடிவம்: (YY/Q/0/M)

(உதாரணம்: ஒக்டோபர் 2022 - கொடுப்பனவுக் குறியீடு: 22401)

வரி வகை குறியீடு: 32

வரி செலுத்துநர் அடையாள இலக்கம்

இலங்கை வங்கியின் (Bank of Ceylon) எந்தவொரு கிளையிலும் கொடுப்பனவினை மேற்கொள்ளலாம்.

**5. பொறுப்புடைய புரள்வு (இரண்டாம் அட்டவணை)**

a. ஏதேனும் பொருளின் இறக்குமதி (சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் சேகரிக்கப்படத்தக்கது) - இறக்குமதிப் பெறுமதியின் 100 %

**இங்கே புரள்வு என்பது (பிரிவு 3) :**

"ச.பா.உ.அ சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி IA இல் குறிப்பிடப்பட்டுள்ள எவையேனும் விலக்களிக்கப்பட்ட பொரு

ளின் பெறுமதியை உள்ளடக்காத, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க (VAT) பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் பெறுமதி சேர் வரிக்கு (VAT) அந்த பொருளுக்கு பெறப்பட்ட பெறுமதி" எனப் பொருள்படும்.

CIF Value + சுங்க தீர்வை + Cess + PAL + Exercise or any other duty payable to Customs + 10% of CIF Value

b. ஏதேனும் பொருளின் உற்பத்தி - புரள்வின் 85%

இங்கே புரள்வு என்பது (பிரிவு 3) :

"ச.பா.உ.அ சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி IA இற் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட பொருட்கள் தவிர்த்து அத்தகைய நபரினால், இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகும் எந்தவொரு பொருளிற்கும் அந்த காலாண்டில் பெறப்பட்ட அல்லது பெறப்படாத ஆனால் பெறப்பட வேண்டிய தொகை" எனப் பொருள்படும்.

c. சேவை வழங்குகை - புரள்வின் 100 %

அ. நிதி சேவை - சாற்றப்படத்தக்க பெறுமதி சேர்ப்பின் 100%

(நிதிச் சேவைகளுக்கு சாற்றப்படத்தக்க பெறுமதி சேர்ப்பு - 2022 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க (VAT) பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 25 இ ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சாற்றப்பட த்தக்க முறையினைப் பிரயோகிப்பதன் மூலம் கணிப்பீடு செய்யப்பட்டது.)

இங்கே புரள்வு என்பது (பிரிவு 3) :

"ச.பா.உ.அ சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட சேவைகள் தவிர்ந்து, இலங்கையில் ஏதேனும் நிதிச் சேவைகளை வழங்கும் வியாபாரத்தினை மேற்கொள்ளும் எவரேனும் நபரினால் ஏதேனும் நிதிச் சேவைகளில் இலங்கையில் வழங்குவதிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படாத ஆனால் பெறப்பட வேண்டிய தொகை" என பொருள்படும்.

ஆ . காணி மற்றும் சீராக்கல் (புரள்வு = விற்பனைப் பெறுமதி - விற்பனை திகதி அன்றுள்ளவாறான காணியின் சந்தைப் பெறுமதி) * 100%

இங்கே புரள்வு என்பது (பிரிவு 3):

"ச.பா.உ.அ சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட சேவைகள் தவிர்ந்து, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க (VAT) பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (7) ஆம் உப பிரிவின் கீழ் பெறப்பட்ட காணி மற்றும் சீராக்கல் வியாபாரத்திலிலிருந்து எழும் ஏதேனும் சேவையினது பெறுமதி" எனப் பொருள்படும்.

இ. (அ) மற்றும் (ஆ) தவிர்ந்த சேவைகள் - புரள்வின் 100%

இங்கே புரள்வு என்பது (பிரிவு 3) :

"ச.பா.உ.அ சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட சேவைகள் தவிர்ந்து, இலங்கையில் சேவையின் வழங்குகையிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படாத ஆனால் பெறப்பட வேண்டிய தொகை" என பொருள்படும்.

d. மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை /வாங்கி விற்றல், இறக்குமதி செய்து விற்றல், தயாரித்து விற்றல் (உற்பத்தி செய்து விற்றலை உள்ளடக்காது)}

அ. இலங்கையில் எவையேனும் பண்டங்களின் எவரேனும் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளர் தொடர்பில் பதிவு செய்யப்பட்டவொரு விநியோகிப்பாளரினால் ஏதேனும் பொருள் விற்பனை செய்யப்படுதல் - புரள்வின் 25%

(இலங்கையில் ஏதேனும் பண்டத்திற்கு எவரேனும் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளர் தொடர்பில் பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர் என்பது, "காலத்திற்கு காலம் அத்தகைய உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரினால் அத்தகைய பண்டத்திற்கு நிருணைக்கும் அத்தகைய விலையில், மொத்த விற்பனைச் சந்தையில் விற்பதற்காக அத்தகைய உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரினால் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளொருவர் அல்லது பங்குடமை (Partnership) " என பொருள்படும்

ஆ . இறக்குமதி மற்றும் விற்பனை அடங்கலாக மேலே (அ) என்ற விடயம் தவிர்ந்த மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை - புரள்வின் 25 %

இங்கே புரள்வு என்பது (பிரிவு 3) :

"ச.பா.உ.அ சட்டத்தின் முதலாம் அட்டவணையின் பகுதி IB இல் குறிப்பிடப்பட்டுள்ள விலக்களிக்கப்பட்ட பொருட்கள் தவிர்த்து, இலங்கையில் ஏதேனும் பொருளின் மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனையிலிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படாத ஆனால் பெறப்பட வேண்டிய தொகை" என பொருள்படும்.

**குறிப்பு: பந்திகள் (b), (c) மற்றும் (d) இன் தேவைப்பாட்டிற்கு புரள்வானது பின்வருவனவற்றை உள்ளடக்கப்படமாட்டாது. (புரள்வு பிரிவு 3)**

- அந்த காலாண்டில் அத்தகைய நபரினால் ஏற்பட்ட ஏதேனும் அறவிடா கடன்.

- 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க (ஏயுவு) பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் கீழ் ஏற்புடைய காலாண்டிற்கு செலுத்தப்பட்ட ஏதேனும்பெறுமதி சேர் வரி (VAT)

- அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சர்வதேச நிகழ்வு தொடர்பில் ஏற்றுமதி அபிவிருத்தி தள்ளுபடியின் கீழ் செலுத்தப்பட்ட ஏதேனும் தள்ளுபடி.

**பின்னர் சேகரிக்கப்பட்ட ஏதேனும் அறவிடா கடனானது** (Bad Debts), **அத்தகைய அறவிடா கடன் சேகரிக்கப்பட்ட காலப்பகுதியில் புரளிற்கு சேர்க்கப்படுதல் வேண்டும்.**

**6. ச.பா.உ.அ. விபரத்திரட்டினை சமர்ப்பித்தல் (பிரிவு 8)**

விபரத்திரட்டினை சமர்ப்பிக்க வேண்டிய திகதி - ஏற்புடைய காலாண்டில் இறுதி மாதத்தை தொடர்ந்து வரும் மாதத்தின் 20 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர்.

| காலாண்டு | சமர்ப்பிக்க வேண்டியதிகதி |
|---|---|
| 1 ஆம் காலாண்டு (1st January - 31st March) | - April 20th |
| 2 ஆம் காலாண்டு (1st April - 30th June) | - July 20th |
| 3 ஆம் காலாண்டு (1st July - 30th September) | - October 20th |
| 4 ஆம் காலாண்டு (1st October - 31st December) | - January 20th |

**சமர்ப்பிக்க வேண்டிய இடம்**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஏற்புடைய நகர /பிராந்திய அலுவலகம் அல்லது

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை காரியாலயத்தின் 1 ஆம் மாடியிலுள்ள மத்திய ஆவணப்படுத்துகை முகாமைத்துவ அலகு (CDMU)

**7. பற்று மற்றும் மீள்கொடுப்பனவு பொறிமுறை (பிரிவு 36)**

உள்ளீட்டுப் பற்று (Input Credit) அல்லது மீள்கொடுப்பனவு (Refund) பொறிமுறை சட்டத்தில் இல்லை

ஏதேனும் ஏற்புடைய காலாண்டிற்கு அத்தகைய நபரினால் ஏதேனும் மேலதிக தொகையாக அறவீடு அல்லது தண்டம் செலுத்தப்பட்டிருப்பின், அத்தொகையானது ஏற்புடைய காலாண்டிற்கு தொடர்ந்து வரும் ஏதேனும் காலாண்டிற்கு செலுத்தப்பட்ட முற்பணமாக கருதப்படுதல் வேண்டும்.

**இணக்கமின்மைக்கான தண்டங்கள்**

குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பதிவிற்கு விண்ணப்பிக்கத்தவறின் - ரூபாய் 25,000/ இனை விஞ்சாத தண்டம்

விபரத்திரட்டினை சமர்ப்பிக்கத் தவறின் ரூபா 50,000ஃ இனை விஞ்சாத தண்டம் தவறுகையிலுள்ள கொடுப்பனவு

தவறுகையிலுள்ள தொகையின் 10% மற்றும் தவறுகையிலுள்ள ஒவ்வொரு மேலதிக மாதத்திற்கும் 2% மேலதிகத் தொகை தண்டமாக செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகையானது அறவீட்டின் 100% விஞ்சுதல் ஆகாது.

**பதிவை இரத்துசெய்தல் (பிரிவு 10)**

பதிவு செய்துள்ள நபர் ஒருவர், அவர் பதிவு செய்த திகதியிலிருந்து 12 மாதங்கள் கடந்த பின்னர் எந்தவொரு வேளையிலும், கீழ்வரும் காரணங்களுக்காக பதிவினை இரத்து செய்வதற்கு ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பம் ஒன்றை மேற்கொள்ளலாம்.

(16ஆம் பக்கம் பார்க்க)



“இப்போதெல்லாம் பயிர்களில் நோய் கண்டால் அதற்கு காரணிகளைக் கண்டு அவற்றைக் கிருமிநாசினிகளை பாவித்து அழிக்கிறோம். ஆனால் நோய் தீருவதில்லை. கட்டுப்பாட்டுக்குள் நிற்கும். செடியை விரைவாக வளர்க்க இரசாயன உரங்களைப் பாவிக்கிறோம். அது நிலத்தில் கேட்டை விளைவிக்கிறது.”

# உணவே மருந்து

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

காலையில் எழுந்து முகம் கழுவாமல் தண்ணீரும் குடிப்பதில்லை. அப்படியே மறந்து அடுக்களையுள் போனாலும், வாயில் கடைவாய் வழிந்த கோடு காட்டிக்கொடுத்து விடும். பல் விளக்கியே ஆகவேண்டும்.

பல்விளக்க நாங்கள் இப்போது தெரிவு செய்வது புதிய புதிய பற்பசைகளைத் தான். அதற்கு முன் பற்பொடியும் வந்தது. எங்கள் காலத்தில், நாங்கள் அடுப்புக்கரி, மணல், உப்பு, செங்கல்லுத் தூள், என எடுத்துக் கொளவது வழக்கம்.

கொஞ்சம் படித்த யாழ்ப்பாணத்து அம்மானும் மகனும் வந்தால் வேப்பங் குச்சி, ஆலம்விழுது எனத் தேடி வாயில் போட்டு சப்பி தும்பாக்கி அதில் பல்விளக்கு வார்கள். என் பெரியப்பா வந்தால் நாயுருவிச் செடியின் வேரில்தான் பல்விளக்கு வார். நாங்கள் பல்விளக்க எடுத்துக் கொள்ளும் பொருட்களெல்லாம் தப்பானவை என்பார். என் அம்மா எங்களுக்கு முரசு கரைகிறது என்று கடுக்காயைச் சுட்டு கரியாக்கிப் பொடிசெய்து அதில் பல் விளக்கத் தருவார். ஒட்டு மொத்தத்தில் எது சரி எது பிழை என்பதில் நாங்கள் பெரியப்பாவை பின்பற்ற முடிவு செய்தோம். அவர் மட்டும் தான் ‘வாகடம்’ படித்தவர் என அறிமுகமானவர். ‘வாகடம்’ என்றால், வைத்திய நூல்கள், சோதிட நூல்கள் போன்ற நெறி முறைகளை கூறும் நூல்வகைகள்.

**“கல்லும் மணலும் கரியுடன் பாளைகளும்**
**வல்லதொரு வைக்கோலும் வைத்து நிதம்**
**- பல்லதனை**
**தேய்ப்பாரேயாமாகில் சேராளே சீதேவி**
**வாய்த்திடுவாள் மூதேவி வந்து.”**

இது எங்கேயோ வாகடமாக வந்த சித்தர் பாடல். அதைச் சொல்லி எங்களை மடக்குவார். பின்ன, அந்த நாளையில் சீதேவியையும் மூதேவியையும் காட்டி பயப்பிடுத்தித்தான் எங்களையும் எங்கள் வீட்டு நடவடிக்கைகளையும் ஒழுங்கு படுத்தி வைப்பார்கள்.(எங்க இப்ப உள்ள பிள்ளையளுக்கு சொல்லட்டன் பாப்பம்) ஆனாலும் நான் ஒரு ரெண்டுங் கெட்டான். அந்தக் காலமானாலும் ‘ஏன்’? என்று கேட்கிற வர்க்கம். பெரியப்பரை அதுக்காக எதிர்த்தெல்லாம் பேச முடியாது. என்றாலும் அவருக்கு சிலபல பணிவிடைகளைச் செய்து ‘ஏன் பெரியப்பு’என்று கேட்டேவிட்டேன்.



“பிள்ளை பல்லில வியாதி வந்தா முகம் கோணிப்போகும். ஒரு வேலையும் செய்ய ஏலாது. அப்பிடியே பல்லில்லாமப் போன முகத்தின்ர அழகு போயிரும். ஒரு சிரிப்பின்ர அழகுதான் மற்றவைய கவரும். ஒருத்தன் நம்பி ஒரு வேலையத்தந்தாலும், சிடுமூஞ்சிக்கு கொடுப்பானோ. வேலையும் இல்ல. நோயும் இருந்தா தரித்திரம் தானே. அதுதான் சீதேவி சேரமாட்டாள். எண்டு சொல்லுறது.”

**“அப்ப இதுக்கு என்னதான் வழி”**

**“வேலுக்கு பல்லிறுகும் வேம்புக்கு**
**பல்லுறுதி**
**பூலுக்கு போகம்பொழியுங்காண்.- ஆலுக்கு**
**தண்டாமரையாளும் சேர்வாளே நாயுருவி**
**கண்டால் வசீகரமாம் காண்.”**

வேலமரம் வேப்பமரம், பூலாங்கொடி ஆலம்விழுது, நாயுருவி இவைதான் பல்லுக்கான மூலிகைகள்.



“இப்போதெல்லாம் பயிர்களில் நோய் கண்டால் அதற்கு காரணிகளை கண்டு அவற்றை கிருமிநாசினிகளை பாவித்து அழிக்கிறோம். நோய் தீருவதில்லை. கட்டுப்பாட்டுக்குள் நிற்கும். செடியை விரைவாக வளர்க்க இரசாயன உரங்களை பாவிக்கிறோம். அது நிலத்தில் கேட்டை விளைவிக்கிறது.”

# உணவே மருந்து

## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

காலையில் எழுந்து முகம் கழுவாமல் தண்ணீரும் குடிப்பதில்லை. அப்படியே மறந்து அடுக்களையுள் போனாலும், வாயில் கடைவாய் வழிந்த கோடு காட்டிக்கொடுத்து விடும். பல் விளக்கியே ஆகவேண்டும்.

பல்விளக்க நாங்கள் இப்போது தெரிவு செய்வது புதிய புதிய பற்பசைகளைத் தான். அதற்கு முன் பற்பொடியும் வந்தது. எங்கள் காலத்தில், நாங்கள் அடுப்புக்கரி, மணல், உப்பு, செங்கல்லுத் தூள், என எடுத்துக் கொள்வோம்.

கொஞ்சம் படித்த யாழ்ப்பாணத்து அம்மானும் மகனும் வந்தால் வேப்பங் குச்சி, ஆலம்விழுது எனத் தேடி வாயில் போட்டு சப்பி தும்பாக்கி அதில் பல்விளக்கு வார்கள். என் பெரியப்பா வந்தால் நாயுருவிச் செடியின் வேரில்தான் பல்விளக்கு வார். நாங்கள் பல்விளக்க எடுத்துக் கொள்ளும் பொருட்களெல்லாம் தப்பானவை என்பார். என் அம்மா எங்களுக்கு முரசு கரைகிறது என்று கடுக்காயை சுட்டு கரியாக்கி பொடிசெய்து அதில் பல் விளக்கத் தருவார். ஓட்டு மொத்தத்தில் எது சரி எது பிழை என்பதில் நாங்கள் பெரியப்பாவை பின்பற்ற முடிவு செய்தோம். அவர் மட்டும் தான் ‘வாகடம்’ படித்தவர் என அறிமுகமானவர். ‘வாகடம்’ என்றால், வைத்திய நூல்கள் சோதிட நால்கள் போன்ற நெறி முறைகளை கூறும் நூல்வகைகள்.

**“கல்லும் மணலும் கரியுடன் பாளைகளும்**
**வல்லதொரு வைக்கோலும் வைத்து நிதம்**
**- பல்லதனை**
**தேய்ப்பாரேயாமாகில் சேராளே சீதேவி**
**வாய்த்திடுவாள் மூதேவி வந்து.”**

இது எங்கேயோ வாகடமாக வந்த சித்தர் பாடல். அதைச் சொல்லி எங்களை மடக்குவார். பின்ன, அந்த நாளையில் சீதேவியையும் மூதேவியையும் காட்டி பயப்பிடுத்தித்தான் எங்களையும் எங்கள் வீட்டு நடவடிக்கைகளையும் ஒழுங்கு படுத்தி வைப்பார்கள். (எங்க இப்ப உள்ள பிள்ளையளுக்கு சொல்லட்டன் பாப்பம்) ஆனாலும் நான் ஒரு ரெண்டுங் கெட்டான். அந்தக் காலமானாலும் ‘ஏன்’? என்று கேட்கிற வர்க்கம். பெரியப்பரை அதுக்காக எதிர்த்



தெல்லாம் பேச முடியாது. என்றாலும் அவருக்கு சிலபல பணிவிடையளைச் செய்து ‘ஏன் பெரியப்பு’என்று கேட்டேவிட்டேன்.

“பிள்ளை பல்லில வியாதி வந்தா முகம் கோணிப்போகும். ஒரு வேலையும் செய்ய ஏலாது. அப்பிடியே பல்லில்லாமப் போன முகத்தின்ர அழகு போயிரும். ஒரு சிரிப்பின்ர அழகுதான் மற்றவைய கவரும். ஒருத்தன் நம்பி ஒரு வேலையத்தந்தாலும், சிடுமூஞ்சிக்கு கொடுப்பானோ. வேலையும் இல்ல. நோயும் இருந்தா தரித்திரம் தானே. அதுதான் சீதேவி சேரமாட்டாள். எண்டு சொல்லுறது.”

**“அப்ப ,துக்கு என்னதான் வழி”**

**“வேலுக்கு பல்லிறுகும் வேம்புக்கு**
**பல்லுறுதி**
**பூலுக்கு போகம்பொழியுங் காண். - ஆலுக்கு**
**தண்டாமரையாளும் சேர்வாளே நாயுருவி**
**கண்டால் வசீகரமாம் காண்.”**

வேலமரம் வேப்பமரம், பூலாங்கொடி ஆலம்விழுது, நாயுருவி ,வைதான் பல்லுக்கான மூலிகைகள்.

தலைக்குப் பரவலாக சாம்பூ வந்தது, அறுபதுகளில்தான். அப்போது அது ஒரு வேளைக் குளிப்புக்கு அளவாக சின்ன பைகளில் இரண்டு ரூபாவுக்கு விற்பனை யானது. அந்த இரண்டு ரூபாவுக்கு ஒரு கொத்தரிசியும் இரண்டு இறாத்தல் சீனியும் வாங்கலாம். ஆகையால் சாதாரண மக் களுக்கு சரிவராது. கொஞ்சம் வசதியா னவர்கள் தலைக்கு தேய்த்து முழுக அரப்பெண்ணை சீயக்காய் என வாங்கி பதம்பண்ணி குளிப்பார்கள். அதுவும் கூட கிடைக்காத மக்கள், குளம் வற்றும் காலங் களில் அதன் அடிப் பொருக்குகளை சேர்த்து வைப்பார்கள். ஒருகைக் களி மண்ணை ஊறவைத்து பிசுபிசுப்பாக்கி தலைக்குத் தேய்த்துக் குளித்தால், முன் னம் சொன்ன பணத்தில் வாங்கும் பொருட்களை விட அருமையாக அழுக் கைநீக்கி சுகத்தை கொடுக்கும். தற்கால மண்குளியல்களின் முன்னோடி நாங் கள்தான். அடுத்தது செம்பருத்தி இலை களை கசக்கி அந்த வழுவழுத்த நீரை தலைக்கும் தேகத்துக்கும் பூசிக் குளித்தால் தலையில் பொடுகு நீங்கும். உடலில் சரும நோய்கள் வராது. தேகம் உஷ்ணம் அடைந்து வயிற்றுக்கடுப்பு நீர்க்கடுப்பு போன்றவை வருங் காலத்தில் ஆவாரை இலைகளை உரலில் இடித்து தலைக்குத் தப்பி சில நிமிடங்கள் கழித்து குளித்தால் உடல் வெப்பம் தணியும். அழகான நீண்ட தலைமுடியும் வனப்பான திட காத்திரமான தேகமும், கொண்ட பெண்கள் வலிமையான வேலைகளையும் செய்தார்கள். இவர்கள் இந்த வேலைக ளுடனேயே வருடாந்தம் பிரசவித்த பெண் களும் அதிகம்.

உடலுக்கு நலமானது. என்று தெரி யாமலே நாங்கள் உண்ணுவ தெல்லாம் மூலிகைகள்தான். அந்த அந்தக்காலங் களில் காடுகளில் முளைத்தவைகள்



பெருமளவு உணவாகியன. அல்லைக் கிழங்கு கொடியோடிப் பூக்கள் வரும். கதிர்கள்போல, அழகிய பச்சைப்பூக்கள். அவற்றைச் சிறு பெட்டி கொண்டு போய் உருவி, கொண்டு வந்து சுண்டல் செய் வோம். அருமையான சுவை அதன் கிழங்கு மிக ஆழமாக நிலத்தில் போயி ருக்கும்.

அல்லைக்கிழங்கை மண்டி போட்டி ருந்து கிண்டியெடுத்து அவித்துத் தின் போம். பிரண்டைக்குருத்தைக்கிள்ளி வந்து நாரெடுத்து அதை அவித்து ஒரு துவையல் செய்வோம். தாளித்து எடுத்தால் அருமை. மணத்தக்காளி சொடக்குத்தக் காளி இரண்டும் வயிற்றுப்புண்ணுக்கு அருமையான மருந்து. அவை எங்கள் தினசரி உணவு. அதாவது போகவர பிடுங்கித் தின்பதுதான். அதுமட்டுமல்ல. கீரை வகைகளில் கானாந்தி, சாத்தாவாரி, பிரண்டை, கறிவேப்பிலை. கானக்கொச்சி, என்பன பணமில்லாமல் கிடைத்த வளங் கள். சலரோகத்துக்கு மூக்கறைச்சி, துத்தி, நன்னாரி என்பவை அருமருந்து என்று இவைபற்றிய சங்கப்பாடல்களும் இருக் கின்றன.

பழங்களாக கூழா விளா புளி நறுவிலி, நாவல், பாலை வீரை பன்னை உலு விந்தை இவைபற்றி முன்னரே தேனாகத் தந்துவிட்டேன். நாங்கள் விளைவிக்கும் காய்கறிகளிலும் இயற்கையாக விளைந் தவை அதிகம் மீறிச் செடிகளில் ஏதாவது நோய் தென்பட்டால் அவற்றை வெட்டி தொலைவில் போட்டு அழித்து விடுவதே வழக்கம்.

இப்போதெல்லாம் பயிர்களில் நோய்



கண்டால் அதற்கு காரணிகளை கண்டு அவற்றை கிருமிநாசினிகளை பாவித்து அழிக்கிறோம். ஆனால் நோய் தீருவ தில்லை. கட்டுப்பாட்டுக்குள் நிற்கும். செடியை விரை வாக வளர்க்க இரசாயன உரங்களை பாவிக்கிறோம். அது நிலத் தில் கேட்டை விளைவிக்கிறது.

இப்போது சொல்கிறார்கள் அவையெல லாம் எமது அன்றாட உணவில் அடக்க மாக இருந்தது. குன்றிமணி கொடியின் இலைகளை சப்பிவிட்டு தண்ணீர் குடித் தால் சர்க்கரை போல இனிக்கும். அதற் காகவே அதைக்கண்டால் உருவித் தின் போம். அது தொண்டை கட்டுக்கு சிறப்பான நிவாரணி என்பது இப்போது தான் தெரி யும். சிறுதும்பைப்பூவில் இடியப்பம் செய்து விளையாடுவோம். அதை அப்படியே வாயில் விளையாட்டாக போட்டுத்தின் போம் இப்போது அது எத்தகைய விஷத் தையும் முறிக்கும் என அறிகிறோம். பொன்னாங்காணி, ஆரை, கங்குன், இவையெல்லாம் எமது கறித்தட்டுப் பாட்டை நீக்கியவைதான். குருவித்த லைப்பாகற்காய் வட்டுக்காய் சுண்டங்காய், என்பன சாதாரணமாக கிடைக்கும். பாகற் காய் அளவேயான தும்பங்காய் அரு மையாகத்தான் கிடைக்கும். என்ன சுவையான கறிவகைகள். அவற்றில் கிருமிநாசினிகளோ இரசாயன உரங்களோ செறியவில்லை. குளத்தின் நீரில் மீன் மட்டுமல்ல, ஒலுத்தண்டு கறியும், அது வற்றியபோது தாமரைக்கிழங்கும் கரைக் குளத்தில் கொட்டிக்கிழங்கும் கிடைக்கும்.

காலப் போக்கில் எமது விவசாய உற் பத்திகள் பெரும் செலவைச் கொண்டதாக மாறி வருகிறது. எனவே அதிகமான விவசாயிகள் விவசாயத்தை கைவிட்டு விட்டு வேறு தொழில்களுக்கு மாறிக் கொண்டிருக்கிறார்கள். அது இயலாத பட்சத்தில் வெளிநாடுகளுக்கு பயணிக் கிறார்கள். வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தாம் அறியாமலே நச்சு உணவுகளுக்கு பழக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுவே நாகரீகம் எனக்கருதி உள்நாட்டி லும் அந்த இத்தாலிய சீன யப்பானிய உணவு வகைகளை உற்பத்தி செய்கி றார்கள். வெளிநாட்டில் வசிக்கும் நம்ம வர்கள் தமிழ் கடைகளை நாடினாலும், அங்கும் இந்த செயற்கை உணவுகளே அதிகமாக வழங்கப்படுகின்றன. நாங்கள் மனது வைத்தால் நோயற்ற வாழ்வு நம் பிகையில் உள்ளதாகவே இருக்கும்.



ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை

# இலாபம் தரும் பாக்குச் செய்கை

**பாக்கு** ஆசிய மற்றும் கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதிகளில் அதிகம் விளைகின்றது. தற்போது தென்னிந்தியா, இலங்கையிலும் பரவலாகப் பயிரிடப்பட்டு வருகிறது. இப்பாக்கானது தமிழர்களின் சடங்குகளிலும், விழாக்களிலும் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது.

பாக்குப் பயிர்ச்செய்கையானது அதிக நீர் கட்டமைப்பு எடுத்துக்கொள்ளும் பயிரகளில் ஒன்று. ஆனால் நீர் ஊற்றி வளர்க்கும் பயிரும் அல்ல. நீர் ஓடைகள், குளக்கரை, அதிக நீர் பயன்பாடு உள்ள இடங்களில் நடுகை செய்வதே சிறந்தது. ஆனால் நீர் தேங்கி நிற்கும் இடங்களில் நடுகை செய்யக்கூடாது.

ஜூன் தொடக்கம் டிசம்பர் மாதங்களில் நடவு செய்யலாம்.

அனுபவம் உள்ள விவசாயிகள் எல்லா காலங்களிலும் நடுகை செய்கின்றார்கள்.

பொதுவாக எல்லா வகையான மண் வகைகளிலும் செய்யலாம். மண் நல்ல வடிகால் வசதியுடன் இருக்கவேண்டும். கடல் மட்டத்திலிருந்து சுமார் 1000 மீட்டர் உயரம் வரை உள்ள இடங்களிலும் செய்யலாம்.

நன்கு முதிர்ந்த தாய் மரங்களிலிருந்து விதைகளைச் சேகரிக்க வேண்டும். விதைகளை 5-6 செ.மீ இடைவெளியில் கற்கள் இல்லாத மணல் கலந்த மண்ணை பரப்பி நாற்று மேடை அமைத்து விதைக் காம்புகள் மேல் நோக்கி இருக்குமாறு நடவு செய்யவேண்டும்.

விதைகள் முளைத்து 2 அல்லது 3 இலைகள் வந்தவுடன், நாற்றுகளைப் பிடுங்கி 30 x 50 செ.மீ அளவுள்ள மண் கலவை நிரப்பிய பொலித்தீன் பைகளில் நடவு செய்யவேண்டும்.

பிறகு நாற்றுகளை நிழலில் வைத்து 12-18 மாதங்கள் வளர்க்கவேண்டும்.

மேற்குறிப்பிட்ட முறைப்படி செய்து வந்தால் அனைத்து நாற்றுக்களையும் எமது மேற்பார்வையின் கீழ் பராமரித்து ஆரோக்கியமான மரங்களாக வளர்த்து நடுகை செய்யலாம்

இவ்வாறு வளர்க்கப்பட்ட நாற்றுகளை 8 அடி இடைவெளியில் நடவு செய்து வளர்க்கவேண்டும்.

8 அடிக்கு குறைவான இடைவெளியில் நடுகை செய்தால் காய்த்திறன் குறைந்து நீண்டு வளர ஆரம்பிக்கும்.

அதிகமான விவசாயிகள் இதே தவறைச் செய்கின்றார்கள்.

நீர் அதிகம் உள்ள இடங்களில் தயங்காமல் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளலாம். இதற்கு மேலதிக உரக் கட்டமைப்பு தேவைப்படாது.

அதிக நீரே இதற்கு உரக் கட்டமைப்பாக கருதப்படுகின்றது.

அதோடு நோய் தாக்கம் மிக மிக குறைவு.

நடுகை செய்து சீராகப் பராமரித்து வந்தால் 3 - 4 வருடங்களில் காய்க்க ஆரம்பிக்கும்.

அறுவடை செய்யும்போது நன்றாக பழுத்த பழங்களை அறுவடை செய்ய வேண்டும்.

காய்ப் பருவத்தில் அறுவடை செய்தால். நாளடைவில் காய்களில் நீர் வற்றி சுருங்கி விடும்.

இவ்வாறு இளம் பருவத்தில் அறுவடை செய்தால். எதிர்காலத்தில் எனக்குரிய சந்தை வாய்ப்பு குறைவடையும்.

சரியான பருவத்தில் அறுவடை செய்தால் பாக்கு பயிரிட்ட விவசாயிகள் சந்தை வாய்ப்பைப் பற்றி ஐயம் கொள்ளத் தேவையில்லை.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மைத் தொடர்பு கொள்ளவும். 0770239784,
**WhatsApp:** 0769196445

*



# எனது கனவுப் பண்ணையை எதற்காக உருவாக்கினேன்?

**கணேசநாதன் துஷாந்தன்**

**நேர்கண்டவர் - ஞா.கவினி**

நாடுகளின் பொருளாதாரம் என்பது காலத்திற்குக் காலம் மாறுபட்டுக் கொண்டுதான் இருக்கிறது. பொரு ளாதார அபிவிருத்தியில் அந்த நாட்டு மக்களின் தற்சார்பு வாழ்க்கை மிகுந்த செல்வாக்கு செலுத்துகின்றது. அந்தவகையில் இப்போது பரவலான பேசு பொருளாக காணப் படுகின்ற இயற்கை விவசாயம் பற்றியும் இயற்கை விவசாயத்தால் விளைகின்ற நன்மைகள் பற்றியும் வவுனியாவில் "எனது கனவு தோட்டம்" என்கின்ற இயற்கை விவசாய பண்ணையின் நிறுவனர் கணேசநாதன் துஷாந்தனால் தமிழர் பொருணமியம் வார இதழுக்கு வழங்கிய செவ்வி –

**கேள்வி -** எனது கனவுத் தோட்டம் என்கின்ற இந்த இயற்கை பண்ணையை ஆரம்பிக்க வேண்டும் என்ற கனவு உங்களுக்கு எப்படி வந்தது?

**பதில் -** இது உண்மையில் தொழில் ரீதியாக தொடங்கப்பட்ட ஒரு பண்ணை அல்ல. எனது நீண்ட நாள் விருப்பத்திற்காக என்னுடைய கனவுப் பண்ணையை நான் உருவாக்கினேன். இது பெரிய முதலீடுகள் எதுவும் இன்றி விவசாயத்திற்கு பொருத்த மில்லை என்று ஒதுக்கப்பட்ட ஒரு நிலத்தில் எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல்



ஆரம்பிக்கப்பட்டது தான் என் கனவு பண்ணை.

**கேள்வி -** விவசாயத்திற்குப் பொருத்தம் இல்லாத நிலத்தை பண்படுத்துவதற்கு நீங்கள் என்ன வழிமுறைகளை கையாண்டீர்கள்?

**பதில் -** ஆரம்பத்தில் சிறுக சிறுக இயற்கை பசளைகளை கொண்டு எனது நிலத்தைப் பண்படுத்தினேன். முற்றுமுழுதாக எனது நிலம் வளமாவதற்கு காரணமாக இருந்தது நான் தயாரித்த மண்புழு உரம் தான். விவசாய மண்ணை பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் இந்த மண்புழு உரம் மிகப்பெரிய பங்காற்றுகிறது என்று தான் சொல்ல வேண்டும்.

**கேள்வி -** உங்கள் கனவு பண்ணையின் உற்பத்தியான மண்புழு உரத்தினை தயாரிக்கும் பொறிமுறைகளை நீங்கள் எவ்வாறு கற்றுக் கொண்டீர்கள்?

**பதில் -** இயற்கை விவசாயம் என்று



ஆரம்பித்த உடனேயே நான் பல பண்ணைகளுக்கு களத்தரிசிப்புக்காக சென்றிருந்தேன். எனது சுய தேடலின் மூலம் உருவாக்கிய மண்புழு உரம் இன்று பலரால் பாராட்டப்பட்டு விரும்பி கொள்வனவு செய்யப்படும் நிலையில் இருக்கிறது. முயற்சித்தால் முடியாது என்று எதுவும் இல்லை. இதனை எனது தோட்டத்திற்கு மாத்திரம் நான் பயன்படுத்திக் கொண்டிருந்தேன். இங்கே நான் எதிர்பார்த்ததற்கும் அதிகமான விளைச்சலையும் பலனையும் பெற்றுக் கொள்ள கூடியதாக இருந்ததை அவதானித்த போது இதனை உற்பத்தி செய்து மற்றவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று விரும்பினேன்.

முதலாவது எனது உற்பத்தியை எப்போதும் எனக்கு பக்கபலமாக இருக்கும் எனது நண்பர்களுக்கு வழங்கினேன். இப்போது இதனை கொஞ்சம் கொஞ்சமாக விநியோகப் படுத்திக் கொண்டிருப்பதால் பல விவசாயிகளும் வீட்டுத்தோட்டம் செய்வோரும் பயனடைகிறார்கள்.

தென்னிலங்கையில் கூட பல தென்னம் தோட்ட உரிமையாளர்கள் எனது மண்புழு உரத்தினை மிகவும் விரும்பி கொள்வனவு செய்கின்றனர்.

**கேள்வி -** தற்போது உங்களுடைய பண்ணையில் எவ்வகையான உற்பத்திகளை செய்து இருக்கிறீர்கள்?

**பதில் -** எனது பண்ணையில் இப்போது பல வகையான பழங்கள், மரக்கறி வகைகள் ஒரு அருமையான நீர் குட்டை போன்ற காணப்படுகின்றன. அத்தோடு மூலிகைகளையும் இயற்கை உரங்களையும் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறேன்.

இயற்கை முறையிலேயே உற்பத்தி செய்யப்படுகின்ற அரிசி எமக்கு கிடைப்பது மிகவும் குறைவாக இருக்கின்றது. நான் எனது கனவு பண்ணையில் இயற்கை முறையில் நெல் விவசாயத்தையும் முன்னெடுத்து இருக்கிறேன். காலப்போக்கில் பாரிய அளவில் எனது பண்ணையை இயற்கை முறையில் விருத்தி செய்ய வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

**கேள்வி -** வீட்டுத்தோட்டம் வைக்க வேண்டும் அல்லது வர்த்தக ரீதியாக பயிரிட வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு உங்கள் கனவு பண்ணை எவ்வகையான சேவைகளை வழங்குகிறது?

**பதில் -** தேவைப்படுபவர்களுக்கு நாங்கள் நேரடியாக சென்று பயிற்சிகளை வழங்குகிறோம். அத்தோடு அவர்களின் கனவுகளுக்கு ஏற்ப அவர்களது நிலத்தில் ஒரு தோட்டத்ததை நாங்கள் திட்டமிட்டு உருவாக்கிக் கொடுக்கிறோம். இது எனது புதிய சேவை நோக்குள்ள வியாபாரமாக இருக்கிறது. இங்கே அவர்கள் தமது விருப்பத்திற்கு ஏற்றவாறு ஒரு இயற்கையான தோட்டத்தை உருவாக்குவதற்கு நமது முழு பங்களிப்பையும் செய்து கொண்டிருக்கிறோம். இதற்காக எம்மிடம் பலர் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். இயற்கை தோட்டத்தில் ஆர்வம் உள்ளவர்கள் யாராவது என்னைத் தொடர்பு கொண்டால் அவர்களுக்கு ஒர் அருமையான இயற்கை தோட்டத்தை உருவாக்கி தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

(16ஆம் பக்கம் பார்க்க)

**கேள்வி -** உங்களது பண்ணையில் உற்பத்தி செய்யப்படுகின்ற மரக்கறிகளையும் பழங்களையும் நீங்கள் எவ்வாறு சந்தைப்படுத்துகிறீர்கள்? சந்தைப்படுத்தலில் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?

**பதில் -** உண்மையிலேயே நஞ்சில்லாத உணவை உண்ண வேண்டும் என்கின்ற விழிப்புணர்வு இப்போது மக்களிடையே பரவலாகக் காணப்படுகின்றது. ஆனால் அதனைச் கொஞ்சம் அதிகமாக விலை கொடுத்து வாங்குவதற்கு யோசிக்கிறார்கள். சாதாரணமாக கிருமிநாசினிகள் மூலம் பெறப்படும் மரக்கறிகளை விட இயற்கை விவசாயத்தின் மூலம் கிடைக்கும் மரக்கறிகளுக்கான செலவும் பெறுமதியும் கூடுதலாகவே இருக்கின்றது. அதனால் ஒப்பிட்டுளவில் எமது உற்பத்திகள் சந்தைப்படுத்தப்படுவது குறைவாகவே இருக்கின்றது. ஆனால் தமது குழந்தைகளுக்கு நஞ்சில்லாத உணவை கொடுக்க வேண்டும் என்று நினைக்கின்ற பலர் எமது பண்ணையை நாடி வந்து மரக்கறிகளையும் பழங்களையும் கொள்வனவு செய்து கொண்டுதான் இருக்கின்றனர்.

**கேள்வி -** விவசாயத்தை இயற்கை வழியில் முன்னெடுக்க ஆயத்தமாக இருக்கின்ற விவசாயிகளுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

**பதில் -** ஆரம்பித்த உடனேயே இயற்கை விவசாயத்தில் அதிக மடங்கு பலன்களை எதிர்பார்க்க முடியாது. ஆனால் இயற்கை நம்மை ஒருபோதும் கைவிடாது. சரியான உரங்களையும் நில பண்படுத்தல்களையும் மேற்கொள்ளும் போது கணிசமான பலனை நாங்கள் பெற்றுக் கொள்ளலாம். வர்த்தக ரீதியாக இயற்கை உற்பத்திகளுக்கு ஒரு சந்தை மேலாண்மையை கொண்டு வருவதோடு, நமது நிலத்தை பாதுகாத்து அடுத்த சந்ததிக்கு விட்டுச் செல்ல வேண்டிய ஒரு பெரிய கடமை எங்களிடம் இருக்கின்றது.

ஆகவே இயற்கை விவசாயத்தையும் இயற்கை உரங்களையும் நாம் எவ்வளவுக்கு எவ்வளவு பயன்படுத்துகிறோமோ அந்த அளவிற்கு ஆரோக்கியமும் வளமும் நிறைந்த ஒரு சமூகத்தை நாம் கட்டி எழுப்பலாம். விவசாயத்தை மேற்கொள்ள விரும்புபவர்களுக்கு என் கனவு பண்ணை மற்றும் அக்ரோ சர்வீஸ் எப்போதும் உடன் இருக்கும்.

## சமூக பாதுகாப்பு .......

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவு 2 இல் குறிப்பிட்டுள்ள வியாபாரத்தை முடிவுறுத்தி இருப்பின், ஏற்புடைய காலாண்டின் அதற்கு அடுத்த முந்திய 4 காலாண்டுகளின் போது மொத்த புரள்வானது, 120 மில்லியன் ரூபாக்களை விஞ்சாவிடின்.

தற்போது நிலவுகின்ற அதிஉச்ச வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினையே தாங்க முடியாத மக்கள் எதிர்கால வாழ்க்கை செலவை எவ்வாறு தாங்கிக் கொள்வார்கள். இந்த புதிய SSCL வரி காரணமாக பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலையானது 2.5% தொடக்கம் 6% அதிகரிப்பினை ஏற்படுத்தி உள்ளது. அது மாத்திரமல்லாது, Input Tax Claims இல்லாத காரணத்தினால் வியாபாரிகள் தங்களுடைய இருப்பினை தக்க வைப்பதற்காக (Survival) பொருள்களின் விலையினை அதிகரிப்பதன் வாயிலாகவே வியாபாரத்தில் நிலைத்து நிற்கக் கூடிய நிலையும் காணப்படுகின்றது.



# அச்சமூட்டும் சர்வதேச பொருளாதார நெருக்கடி




> கொரோனா தாக்கத்துக்குப் பிறகு பொருட்களின் உற்பத்தி சுணக்கமும், தேவை அதிகரிப்பும் பணவீக்கத்தை அதிகரித்தன. இதனிடையே ரஷ்யா –உக்ரைன் போரும் சேர்ந்து கொண்டு பணவீக்கத்தை மேலும் அதிகரித்தது.

சமீப காலமாக குறைந்துவரும் உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி), பண மதிப்பு சரிவு, வட்டி விகித உயர்வு, உணவு, எரிபொருட்களின் விலை ஏற்றம் ஆகியவை உலகப் பொருளாதாரத்தில் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளன. தற்போதைய நிலையில் பொருளாதார பின்னடைவை தவிர்க்க முடியாது என உலக வங்கி தலைவர் டேவிட் மால்பஸ் தெரிவித்துள்ளார்.

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு (ஓஇசிடி) இந்த ஆண்டு உலகின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சி 2.2 % ஆக இருக்கும் என்றும், ஆனால் முன்பு யூகிக்கப்பட்ட3.1% வளர்ச்சிக்கு வாய்ப்பில்லை என்றும் தெரிவித்துள்ளது.

பொதுவாக பொருளாதார நெருக்கடி என்பது தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளுக்கு ஒரு நாட்டின் ஜிடிபி குறைவதை குறிக்கும். ஒரு நாட்டின் ஜிடிபியில் முதலீட்டுச் செலவும் நுகர்வுச்செலவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை இரண்டுமே குறையும் போது வளர்ச்சி வேகம் குறையவே செய்யும்.

கொரோனா தாக்கத்துக்குப் பிறகு பொருட்களின் உற்பத்திச் சுணக்கமும், தேவை அதிகரிப்பும் பணவீக்கத்தை அதிகரித்தன. இதனிடையே ரஷ்யா – உக்ரைன் போரும் சேர்ந்து கொண்டு பணவீக்கத்தை மேலும் அதிகரித்தது.

அமெரிக்காவில் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பணவீக்கம் உச்சத்தை தொட்டது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த உலக நாடுகளின் மத்திய வங்கிகள் வட்டி விகிதத்தை உயர்த்தி வருகின்றன. நம் நாட்டின் ரிசர்வ் வங்கி நடப்பு நிதி ஆண்டில் மட்டும் 6 முறை வட்டி விகிதத்தை உயர்த்தியுள்ளது.

பொதுவாகப் பணவீக்கத்தின் தாக்கம் பொருளாதாரச் சரிவு ஏற்பட வழிவகுக்கும். ஏனெனில் அதிகப்படியான பணவீக்கத்தை கட்டுப்படுத்த வட்டி விகிதம் உயர்த்தப்படும். அதன் விளைவாக உற்பத்திச் செலவுகள் கூடும். நிறுவனங்கள் ஆட்குறைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும். இதனால், வருமானம் சரிந்து நுகர்வோரின் தேவைகளும் குறையும். தேவைகள் குறையும்போது நிறுவனங்கள் முதலீடுகளை குறைத்துக் கொள்ளும். இது தேக்கநிலைக்கு வழி வகுக்கும்.

வட்டி விகிதத்தை உயர்த்திப் பணப் புழக்கத்தை கட்டுப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடும்போது தற்போதைய உலக மயமாக்கப்பட்ட பொருளாதாரத்தில் பாதிப்புகள் கடுமையானதாகவே இருக்கும்.

ஒரு நாடு மட்டும் வட்டி விகிதத்தை உயர்த்தும்போது அந்நியச் செலாவணி அதிகளவில் உள்ளே வரும். இதனால் அந்த நாட்டின் நாணய மதிப்பு உயரும். ஏற்றுமதி அதிகரித்து பொருளாதார வளர்ச்சி ஏற்படும். ஆனால் வட்டி விகிதத்தை ஒரே நேரத்தில் உலக நாடுகள் உயர்த்துகின்ற போது ஏற்றுமதியும் அதிகரிக்காது, வளர்ச்சியும் ஏற்படாது.

நெருக்கடி காலத்தில் வேலையின்மை அதிகரிக்கும்போது வங்கிகள் கடன் வழங்க தயங்கும் அல்லது கடன் வழங்கும் அளவை குறைத்துக் கொள்ளும். மேலும், வாடிக்கையாளர்களின் கடன் திருப்பி செலுத்தல் விகிதமும் குறையும். வளரும் நாடுகளின் நடப்புக் கணக்கு பற்றாக்குறை அதிகமாக உள்ளது. வெளிநாட்டுக் கடன்களை நம் புகிறபட்சத்தில் மிகவும் மோசமான நிலையை சந்திக்க நேரிடலாம்.

ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு மதிப்பீட்டின்படி மூன்றில் ஒரு பங்கு வளரும் நாடுகளின் நாணய மதிப்பு 10 சதவீதத்திற்கும் மேலாக குறைந்துள்ளது. பொருளாதார நெருக்கடி அதிகரிக்கும் சூழ்நிலையில் இந்த நாடுகள் பல சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும்.

வளர்ந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வேகம் குறைவாக இருப்பதால் வளரும் நாடுகளும் பாதிப்புக்கு உள்ளாகும். இதனை எதிர்கொள்ள நிறுவனங்கள் உற்பத்தியை அதிகரிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்கிறார் உலக வங்கியின் தலைவர் மால்பஸ். இந்த யோசனையை அவ்வளவு எளிதாகக் கடந்துவிட முடியாது.

பணவீக்கத்திற்கு அடிப்படை காரணமாக இருக்கக்கூடிய உற்பத்தி குறைவை சரிப்படுத்த வேண்டும். தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் அவர்களது நலன் சார்ந்த கொள்கைகளில் கவனம் செலுத்த வேண்டும். ஊதியம் என்பது முதலாளிகளுக்கு உற்பத்தி செலவு மட்டுமல்ல எண்ணற்ற தொழிலாளர்களின் வருமானமாகவும் இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. அவர்களுடைய ஊதியம்தான் பொருள்களுக்கான தேவையை குறைந்துவிடாமல் பார்த்துக் கொள்கிறது. தேவையில் குறைபாடு ஏற்படுகிற போதுதான் சந்தை தேக்க நிலையை சந்திக்கிறது. வேலையின்மை பிரச்சினை உருவாகிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு ஆளும் அரசுகள் பொருளாதார கொள்கையை வகுக்க வேண்டும். *

- ரஜிதா அரிச்சந்திரன் -



# தொழில் முயற்சியாண்மை மூலம் பொருளாதாரத்தை வெல்லுங்கள்

சூழலில் கிடைக்கும் வளங்களையும், காலம், நிதி, திறமை போன்றவற்றினையும் பயன்படுத்தி புதியன படைத்தவலே முயற்சியாண்மையாகும். இதில் முயற்சியாளர், முயற்சி, புத்தாக்கம் என்பன முக்கியம் பெறுகின்றன. மக்கள் விரும்பும் பொருட்களை உருவாக்கி சந்தைப்படுத்தலின் போது உற்பத்தி தொடர்பில் முடிவு எடுத்தல் ஒழுங்கமைத்தல் செயற்படுத்தல் முக்கியமான கருமங்களாக அமைகின்றன. அந்தவகையில் முயற்சியாண்மையூடாக எவ்வாறாக பொருளாதாரத்தினை வெல்ல முடியும் என்பதனை ஆராய்வதே இக் கட்டுரை யின் நோக்கமாகும்.

போட்டி நிறைந்த வர்த்தக உலகில் போட்டிகளை வெல்ல முயற்சியாண்மை அவசியமாகிறது. உலகம் கிராமமாக சுருங்கிய போதும் அதன் வர்த்தக வளர்ச்சியும் வர்த்தக நிறுவனங்களும் அபரிமிதமாக தோற்றம் பெற்று வருகிறது. அதே வேளை அதிக சந்தை வாய்ப்புகளும் காணப்படுகின்றன. எனவே தனித்துவத்தை பேணவும் பொருளாதார ஸ்த்திரம் காணவும் முயற்சியாலண்மை அவசியமாகிறது.

முயற்சியாண்மை மூலம் முயற்சியாளர்களும் சமுதாயமும் ஒருங்கே நலன் பெறுகின்றன. முயற்சியாளர் தம் திறமைக்கும் அற்பணிப்புமிக்க உழைப்புக்கும் ஏற்ப அதிக வருமானத்தை பெற்றுக்கொண்டு தங்களது பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும். அவ்வாறே சமுதாயத்தில் புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகும் போது தனிநபர் வருமானம் அதிகரிப்பதன் காரணமாக வாழ்க்கை தரம் உயருவதுடன் பிரதேச வளங்களும் சிறந்த பயன்பாட்டுக்குள்ளாகும். இவற்றினூடாக பொருளாதார வளமிக்க சமுதாயம் தோற்றம் பெறும்.

> *"போட்டி நிறைந்த வர்த்தக உலகில் போட்டிகளை வெல்ல முயற்சியாண்மை அவசியமாகிறது. உலகம் கிராமமாக சுருங்கிய போதும் அதன் வர்த்தக வளர்ச்சியும் வர்த்தக நிறுவனங்களும் அபரிமிதமாக தோற்றம் பெற்று வருகிறது. அதேவேளை அதிக சந்தை வாய்ப்புகளும் காணப் படுகின்றன. எனவே தனித் துவத்தை பேணவும் பொருளாதார ஸ்த்திரம் காணவும் முயற்சியாண்மை அவசியமாகிறது."*

பிரதேசத்தில் காணப்படுகின்ற வளங்களை சரியான முறையில் பயன்படுத்தி உருவாக்கப்படும் பொருட்களை சந்தைப் படுத்துதல் மூலம் அந்நிய செலாவணி வருமானத்தினை பெற்று கொள்ள முடியும். உதாரணமாக சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தரும் போது இங்கிருக்கும் பனை உற்பத்தி பொருட்களான பனாட்டு, பனம்களி, பனை ஓலை தொப்பி போன்ற வற்றினை கொள்வனவு செய்து கொள்கிறார்கள். இதன் மூலம் அந்நிய செலாவணி வருமானத்தினை பெற்று கொள்ள முடிகின்றது.

மக்கள் விரும்பும் வகையிலான புதிய பொருட்களை கண்டுபிடித்து சந்தைப்படுத்தி வாடிக்கையாளர் மனதினை கவரும் அதே சமயம் நட்ட அபாயத்தினையும் ஏற்றுகொள்ள தயாராக இருக்க வேண்டும். ஏனெனில் சந்தையில் நிலமை எவ்வாறு உள்ளதோ அதற்கேற்றவாறு தான் கேள்வி இருக்கும் ஆயினும் திறமையானவர் சந்தை நிலமையை கருத்திற்கொண்டு அதன் மீதான உற்பத்தி பொருளின் கேள்வியில் பலம் பலவீனம், சந்தர்ப்பம், அபாயங்கள் என்பவற்றினை கருத்திற்கொண்டு அதன் மீதான உற்பத்தியை தொடர வேண்டும் . அதனூடாக சிறந்த சந்தை வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும். உதாரணமாக எமது பிரதேச உற்பத்தி

பொருட்களான தும்பிலான சாக்குகள், சிரட்டை மூலம் உருவாக்கப்பட்ட அழகு பொருட்களுக்கு வெளிநாட்டு பிரஜைகளிடம் அதிக கேள்வியுண்டு இவ்வாறான தொழில்களை ஊக்கு விப்பதனூடாக கிராமத்தில் வசிக்கும் அனைவரினதும் வாழ்க்கை தரத்தை உயர்த்த முடியும். இவற்றை நவீன தொழில்நுட்பம் மூலம் காட்சிப்படுத்தி இணையத்தில் விற்பனை செய்யவும் முடியும். இதன் மூலம் சூழலில் காணப்படும் பொருட்களை வருமானம் ஈட்டும் தொழிலாக மாற்றி அந்நியச் செலாவணி வருமானத்தினை பெற்று கொள்ள முடிகின்றது.

சிறிய தொழில்களாக உருவாக்கப்பட்ட தொழில்களை படிப்படியாக வளர்ச்சி கண்டு பாரிய தொழில்களாக மாற்றி வேலையற்ற பலருக்கும் வேலை வாய்ப்பினை வழங்க முடியும். இதனூடாக தலாவீத வருமானம் அதிகரிப்பதன் மூலம் நாடு அபிவிருத்தியை நோக்கி செல்லும் வாய்ப்புண்டாகும்.

இன்று வல்லரசுகளுடன் போட்டி போட்டு கொண்டு முன்னேறிவரும் சீனா, தன்னுடைய வளர்ச்சியை முயற்சியாண்மை மூலமாகவே அடைந்தது. சீனாவில் சிறுவர் முதல் பெரியவர் தம் வரை அனைவரும் முயற்சியாளர்களே அதே போல் முயற்சி செய்வோமானால் எமது நாடும் அபிவிருத்திகாண முடியும்.

இரண்டாம் உலக போரினால் பாதிக்கப்பட்டு எந்த வளமும் இன்றி இருந்த யப்பான் நாட்டு மக்களின் விடாமுயற்சியால் ஜப்பான் தன் அபிவிருத்தியை அடைந்தது.




து. உதாரணமாக ஜப்பானில் வளமான நிலம் இல்லாத நிலையிலும் வளமான மண்ணை எடுத்து வந்து அதில் விவசாயம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இஸ்ரேல் தன்னிடம் வளங்கள் இல்லாத போதிலும் தன் முயற்சியினால் வளர்ச்சி அடைந்தது. இதேபோல் இன்றைய வல்லரசாக திகழும் அமெரிக்காவும் பொருளாதார வளர்ச்சி மூலமாகவே வல்லரசாக வளர்ச்சி அடைந்தது.

ஒரு நாட்டை அடக்க அந்த நாட்டுக்கு பொருளாதார தடையை ஏற்படுத்தி நிலை குலைய செய்கின்றனர். எனவே பொருளாதார வளர்ச்சி யானது மிகவும் அவசியமாகும். பொருளாதார வளர்ச்சியை அடைய முயற்சியாண்மை அவசியமாகிறது.

முயற்சியாளர்கள் வெற்றி பெறுவதற்கு நேர்மறை எண்ணங்களை உடையவர்களாக இருக்க வேண்டும். இன்றைய உலகின் வெற்றி யாளர்களான பில்கேட்ஸ்,




டாட்டா, ஸ்ரிவ்யொப் போன்றவர்கள் ஆரம்பத்தில் சிறு முயற்சியாளர்களாக இருந்து சிகரம் கொண்டவர்களே. இவர்களை முன்னுதாரணமாக கொண்டு நாட்டையும் தங்களையும் பொருளாதாரத்தில் வெற்றிபெற வைக்கவேண்டும்.

பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெற்றுக் கொள்ளும் போது வறுமை, பஞ்சம், பட்டினியில் இருந்து மக்களை காத்து கர்ப்பிணி தாய்மார் மரணம், சிசு மரணம், போசாக்கற்ற குழந்தைகள் பிறப்பதை கட்டுபடுத்தி மனித வள அபிவிருத்தி சுட்டெணில் முன்னுக்கு வரமுடியும்.

நாட்டின் மனிதவள அபிவிருத்தி சுட்டியை அதிகரிப்பதை நோக்கமாகக்கொண்ட நாட்டிற்கு பொருளாதார வளர்ச்சி அவசியம். ஏனெனில் சிறந்த கல்வி, மருத்துவம், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நிறைய முதலிட வேண்டும்.

முயற்சியாண்மை மூலம் பணவீக்கத்தை கட்டுப்படுத்த முடியும். வருமானம் அதிகரிக்கும் போது டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியைக் கூட்ட முடியும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும்போது எமது நாட்டு பங்குச்சந்தை உறுதியான நிலையை அடையும் இதன் மூலம் வெளிநாட்டு முதலீடுகளை உள்ளீர்க்கவும் முடியும்.

பல்வேறு வகையான வியாபார துணைப் சேவைகளை அதிகரிக்கவும் முடியும் இதனூடாக பல துறைகளிலும் வளர்ச்சி ஏற்படும். உதாரணமாக உணவகங்கள், விடுதிகள், வாடகை வாகனங்கள் போன்றவற்றின் வருமானத்தையும் அதிகரிக்க முடியும்.

தேவையற்ற பிளாஸ்டிக், தும்பு, சிரட்டை, சிற்பி முதலான பொருட்களை மீள் உற்பத்தி செய்தலூடாக வருமானத்தை அதிகரிப்பது மட்டுமல்லாமல் சூழல் மாசுபடுவதையும் இழிவளவாக்கலாம்.

நவீன தொழில்நுட்பங்களின் அறிமுகம் கிடைப்பதுடன் பாவனையும் அதிகரிக்கும் இதன் மூலம் உற்பத்தியை அதி கரிப்பதுடன் வேலைய இலகு படுத்தி கொள்ள வசதியாகின்றது. உதாரணமாக அருவிவெட்டலில் மனிதவளத்தை பயன்படுத்துகை யில் அதிக நேரம் மற்றும் சேதாரம் அதிகம் இயந்திரங்கள் மூலம் வெட்டும் போது இலகுவாக செய்து விட முடியும்.

உற்பத்தி வளங்களின் உடமையாளர்களுக்கு வருமானத்தினை ஏற்படுத்த முடியும். உதாரணமாக உணவகங்களில் கழிக்கப்படும் சிரட்டைகளை சிரட்டை பொருட்கள் உற்பத்தி செய்பவர்கள் கொள்வனவு செய்து கொள்ளும் போது உணவக உரிமையாளருக்கு வருமானம் கிடைப்பதனை குறிப்பிட்டலாம்.

புதிய முயற்சியாளர்கள் தோற்றம் பெறும்போது வருமான சமமின்மையை குறைக்க முடியும் பதிலாக வருமானம் அதிகரிப்பதன் காரணமாக ஏற்ற தாழ்வுகளை நீக்கவும் மூடியும்.


சுயதொழிலில் சுதந்திரமாக செயல்பட முடியும் மேலும் பல வழிகளில் உழைக்கவும் திறமைக்கேற்ப பல உத்திகளை கையாண்டு சாதனையாளராக முடியும்.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் புதிய பல நிறுவனங்கள் தோற்றம் பெறும்போது வருமான அதிகரிப்புடன் பொருட்கள் விலை குறைவதால் மக்களின் சுமை குறையும் மக்கள் மகிழ்ச்சி அடையும் போது மகிழ்ச்சி சுட்டி அதிகரிக்கும்.

மக்கள் பொருளாதார வளர்ச்சி அடைவதனூடாக மக்களிற்காக அரசினால் வழங்கப்படும் நலன்புரி உதவிகள் இழிவளவாகும் போது அதற்கு அரசின் செலவுகள் மீதப்படுத்தப்படும்.

பொருட்கள், சேவைகள் உற்பத்தி அதிகரிக்கும் போது அரசின் வரி வருமானம் அதிகரிக்கும் இதன் மூலம் நாட்டின் உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்தலாம்.

மேற்குறிப்பிட்ட வகையில் முயற்சியாண்மை உயர்த்துவதனூடாக பொருளாதாரத்தை வெற்றி கொண்டு நாட்டை அபிவிருத்தி பாதையில் இட்டுச் செல்ல முடியும். *



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர்

# வேலையாட்கள் காரணமாக தோல்வியடைந்த கால்நடைப் பண்ணைகள்

**கதை 1**

அவர் வவுனியாவில் பணியாற்றிய கால்நடை வைத்தியர். வவுனியா வடக்கு கனகராயன்குளம் பகுதியில் ஒரு பால் பண்ணை ஒன்றைத் தொடங்கியிருந்தார். யாழ்ப்பாணத்திலிருந்து 12 நல்லின ஜெர்சி மாடுகளை கன்று ஈன்று பால்கறக்கும்நிலையில் கொண்டு வந்து அந்தப் பண்ணை தொடங்கப்பட்டது. ஒரு கட்டத்தில் தினசரி 100 லிட்டருக்கு அதிகமாக அந்தப் பண்ணையில் அவர் பாலினைக் கறந்து தனியார் பால் சேகரிப்பு நிலையம் ஒன்றுக்கு வழங்கி இருந்தார். மாடுகளை கவனிப்பதற்காக இரண்டு பணியாளர்களை அவர் நியமித்திருந்தார். மாதம் 50,000 வரை அவர் சம்பளமாக ஒவ்வொருவருக்கும் வழங்கி இருந்தார். அன்றைய திகதியில் இது ஒரு நல்ல சம்பளம். மாடுகளுக்கு தேவையான தீவனங்கள் மருந்துகள் ஏனைய உதவிகளை அவர் வவுனியாவில் இருந்த படி செய்து கொண்டிருந்தார். வாரம் இரு தடவை அவர் பண்ணையை நேரடியாக வந்து மேற்பார்வை செய்ததுடன் நோய் நிலைமைகள் தொடர்பாக மிகுந்த கரிசனையையும் அவர்களுக்கு ஆலோசனையும் வழங்கி இருந்தார். இது எப்படி இருக்க அந்த ஊரில் இடம் பெற்ற ஒரு கோயில் திருவிழாவின் பொழுது கோயிலில் பதவியில் இருக்கும் ஒருவர் "வைத்தியரே உங்கள் பண்ணையின் பால் அருமையாக இருக்கிறது. அதன் கொழுப்புச் சத்து மிக அதிகமாகவும் அந்தப் பால் மிகச்சுவை மிக்கதாகவும் இருக்கிறது " என்று சொல்ல வைத்தியருக்கோ அதிர்ச்சி. ஏனெனில் அவருடைய பண்ணையின் பால் முழுதும் பால் சேகரிக்கும் தனியார் நிறுவனத்துக்கு அல்லவா போகிறது என்ற காரணத்தினால் அவர் அதிர்ச்சி அடைந்தார். தீர விசாரித்து பார்த்த பொழுது பணியாற்றுகின்ற ஒருவர் விடியற்காலை 4 மணிக்கு எழும்பி ஒரு மாட்டில் பாலை கறந்து விடுவார். அதனை தனியாக



வைத்து கோயிலுக்கு கொடுத்து விட்டு, ஒன்றுமே தெரியாதபடி காலை ஆறு மணிக்கு மற்றைய மாடுகளில் கறந்து தனியார் நிறுவனத்துக்கு வழங்குவார். இது மற்றைய பணியாளருக்கு தவிர வேறு யாருக்கும் தெரியாது.இருவரும் வருமானத்தைப் பிரித்து எடுத்தனர். கோயிலுக்கு வழங்கும் பால் எந்தவித கணக்கிலும் இடம்பெறாது. இது ஒரு வருடமாக இடம் பெறுகின்ற ஒரு நூதனமான திருட்டு. கால்நடை வைத்தியர் கோபமடைந்து அவர்கள் இருவரையும் வேலையை விட்டு நிறுத்திவிட்டு வேறு இரு பணியாளர்களை நியமித்திருந்தார். அவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் கிடையாது என்பதுடன் கால்நடை வளர்ப்பு தொடர்பாக அனுபவம் இல்லாதவர்கள். அவர்களின் தவறான முகாமைத்துவ முறைகள் காரணமாக ஒரு சில மாடுகள் இறந்து போக அவர் தன்னுடைய கணக்கு வழக்குகளை பார்த்த பொழுது பல லட்சக்கணக்கான பணம் நட்டமடைந்ததை அவர் அறிந்து கொண்டார். உடனடியாக அவர் சுதாகரித்து கொண்டு மாடுகளை விற்று விட்டார். அதாவது ஒரு கால்நடை வைத்தியராலேயே பால் பண்ணையை நடத்த முடியாத ஒரு துர்பாக்கிய நிலைமை ஏற்பட்டது

**கதை 2**

இது மன்னார் மாவட்டத்தில் மடு பிரதேச செயலகப் பிரிவில் பெரிய பண்டி விரிச்சான் கிராமத்தில் நடந்த கதை. யாழ்பாணம் கைதடி பகுதியில் இருந்து கொண்டுவந்த நூற்றுக்கணக்கான செம்மறி ஆடுகளை கொழும்பில் இருக்கின்ற ஒரு தொழிலதிபர் பண்டிவிரிச்சான் தனது கிராமத்தில் வளர்த்து வந்தார். ஆடுகளை பார்க்க அந்த ஊரைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினை அவர் நியமித்தும் இருந்தார். அவர்களுக்கு மாதம் 60,000 வரை சம்பளமாக வழங்கியதுடன் பயிர் செய்வதற்கு நிலமும் தங்க வீடொன்றையும் வழங்கியிருந்தார். விடுமுறை நாட்களில் தனது குடும்பத்துடன் வந்து அந்த ஆடுகளையும் ஆடுகள் உள்ள பண்ணையைப் பார்த்து